Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

කණ්ණෝට්ටම KANNOTTAM

வெளியீடு-26 | 15 ஜுலை 2005 | விலை:- 07.00

காட்டுமிராண்டி நிலையிலிருந்து நாகரீகத்துக்கு, பின் தங்கியதிலிருந்து முன்னேறியதை நோக்கி, செயற்படுவதே மனிதகுலத்தின் உன்னத இயக்கமாகும்.

# சுனாமி கட்டமைப்பு கையெழுத்தின் பின்னர்

சுனாமி கட்டமைப்பு உருவாக்கப்படும்போதே அது பற்றி வெவ்வேறு அபிப்பிராயங்கள், விடயங்கள், எதிர்ப்பியக்கங்கள், சாதகமான, பாதகமான கருத்துநிலைகள் தோன்றின. சரித்திரம் கண்டிராத இலங்கையின் கரையோர நாகரிகத்தை வாழ்வை சங்காரம் செய்த அந்த டிசம்பர் 26 ஆம் நாள் இலங்கையரால் மாத்திரமல்ல, மனித குலத்தால் மறக்கக் கூடியதல்ல.

அலைகள் குமுறியெழுந்து தெற்கு, தென்கிழக்காசிய கரையோர வாழ்வை துடைத்தெடுத்துச் சென்ற பேரழிவு நிகழ்வானது. மனித குலம் பூமியில் தொடர்ந்து எவ்வாறு வாழ்வது என்ற கேள்வியை அழுத்தமாக எழுப்பிய நாளது.

அந்த நாளில் நிகழ்ந்த அழிவு இலங்கையைப் பொறுத்தவரை 20 வருட யுத்தநிகழ்வுகளின் கோரக்காட்சியின் பல பன்மடங்கை கண்ணை இமைக்கும் நேரத்தில் நிகழ்த்திக்காட்டிய பயங்கர அனுபவம் அது.

இலங்கையர்கள் அனைவரும் தமது இன, மத, பிரதேச, சாதி,சமூக எல்லைகளை கடந்து கூடி கண்ணீர் விட்ட காட்சி அது.

இயற்கையின் கொடுஞ்சீற்றத்திற்கு முன்னால் நாம் முகவரியற்றவர்கள் என்று உணர்த்தப்பட்ட நாள் அது. எமக்குள் உள்ள வேறுபாடுகளைப் பார்த்து இயற்கை எக்காளமிட்டு சிரித்த கணமது.

ஆம் அந்த பேரழிவு அனுபவத்தை சந்தித்து உயிர்வாழ்பவர்கள் உற்ற சுற்றத்தை இழந்தவர்கள் இறு கூடாரங்களில், அகதிமுகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். சிறுவர், சிறுமியருக்கு பாதுகாப்பு வேண்டும்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு இருப்பிடம், பாதுகாப்பு, தொழில், வாழ்க்கை, வாழ்க்கை மீதான பிடியை ஏற்படுத்திக் கொள்வதில் மனித குலத்திற்கு குறிப்பாக பெரும் பொறுப்பும் பங்கும் உண்டு.

சுனாமி நிவாரண பணிகளுக்கு கட்டமைப்பு தேவை.


ஆனால் அந்த மாபெரும் மானிட கைங்கரியத்தை செய்வதற்கு தார்மீகத தகுதிகள் சில அடிப்படையானவை.

சுனாமி முகாமில் சுடுபவர்கள், கிறனைட் வீசுபவர்கள், சிறுவர்,சிறுமியரை பிடித்துச் செல்பவர்கள் அந்த பணியை மேற்கொள்வதில் உள்ள பொருத்தப்பாடின்மையே அது.

சுனாமி அகதி முகாமில் வழங்கப்படும் உணவு நிவாரணப் பொருட்களுக்கான உணவு முத்திரையையே வெட்டுபவர்கள் அந்த மானிட கைங்கரியத்தை செய்ய முடியுமா என்பதே அது.

உதவி வழங்கும் நாடுகள் என்பன பல்வேறு நாடுகளில் நிவாரணப்பணிகளை மேற்கொண்ட அனுபவஸ்தர்களை உள்ளடக்கியது.

தொடர்ச்சி 02ம் பக்கம்






சென்னையில் தோழர் பத்மநாபா-தியாகிகள் நினைவு நாள் கருத்தரங்கு ஸ்ரீநிவாச சாஸ்திரி மன்ற மண்டபத்தில் முற்போக்கு சிந்தனையாளர் மன்றத்தினால் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டது.



யாழ்ப்பாணம் அலுவலகத்தில் தியாகிகள் தின நிகழ்வு




மட்டக்களப்பு அலுவலகத்தில் தியாகிகள் தின நிகழ்வு



அவுஸ்திரேலியாவில் தியாகிகள் தின நிகழ்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணோட்டம்



# பாசிஸ்டுக்கள் மயான பூமிக்காக

இலங்கையில் இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண்பதற்கான வாய்ப்புக்கள் தொலைதூரம் போய் விட்டன என்பது கசப்பான உண்மையா?

இதற்கான முழுப்பொறுப்பையும் புலிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். வெவ்வேறு காலகட்டங்களிலும் இனப்பிரச்சினை தீர்வுக்கான எடுத்த முயற்சிகளை அவர்கள்தான் பிரதானமாக சீர்குலைத்தார்கள்.

1987ல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாகாணசபை முறை அறிமுகப்படுத்தப்பட்ட போது, வடக்கு கிழக்கு மாகாண சபையின் செயற்பாடுகளை சீர்குலைத்து அதன் பலாபலன்கள் தமிழ் மக்களுக்கு கிட்டாமல் செய்ததில் புலிகளுக்கு பெரும் பங்கு உண்டு.

அமைதிகாக்க வந்த இந்திய சமாதான படையுடன் போரை ஆரம்பித்ததன் மூலமும், பிரேமதாசா அரசுடன் கூட்டமைத்து மாகாண அரசை வடக்கு கிழக்கில் இல்லாது ஒழித்ததாலும், அமைதிக்காக்க வந்த இந்திய சமாதானப் படையை இலங்கையை விட்டு வெளியேறுவதற்கான சங்கடமான சூழ்நிலையை உருவாக்கியதன் மூலமும், 1990 இல் சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எப் செயலாளர் நாயகம் பத்மநாபா உட்பட 13 தோழர்கள் படுகொலை செய்யப்பட்டதன் மூலமும், இலங்கையில் அமைதி நிலவ வேண்டும் என்ற கரிசனை கொண்டிருந்த முன்னாள் பாரதப் பிரதமர் ராஜீவ்காந்தி அவர்களை படுகொலை செய்ததன் மூலமும், இந்தியப் பிராந்தியத்தின் நலனுக்கும், இலங்கையின் நலனுக்கும், தமிழர்களின் நலனுக்கும் அவர்கள் பெரும் துரோகம் இழைத்திருக்கிறார்கள். புலிகள் எப்போதும் இனப்பிரச்சினை தீர்வு, இலங்கையின் சமூகங்களின் ஐக்கியம் எல்லாவற்றையும் விட மாபியா சட்டவிரோத வியாபாரிகள் போலவே அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

பிரேமதாசாவுடன் ஐக்கியப்பட்டிருந்த போது பெருமளவு பணத்தையும், ஆயுதங்களையும் கோரிப்பெற்றார்கள். தமிழர்களால் பரவலாக அங்கீகரிக்கப்பட்டிருந்த தலைவர் அமிர்தலிங்கத்தை பிரேமதாசாவுடன் தேனிலவு நடத்திய காலத்தில் படுகொலை செய்தார்கள்.

1990 இல் முஸ்லீம்களை உடுத்த துணியுடன் அவர்களிடம் இருந்தவற்றை எல்லாம் பிடுங்கிக்கொண்டு வடக்கில் இருந்து வெளியேற்றியதன் மூலம் தமிழ், முஸ்லீம் நல்லுறவிற்கு பெரும்பங்கம் விளைவித்தார்கள்.

எல்லைப்புற தேசங்களில் வாழ்ந்த, பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என்று பார்க்காமல் படுகொலை செய்ததன்மூலம் தமிழர்களின் பிரச்சினையை ஆதரவுடன் நோக்கக் கூடிய சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மனகிலேசத்தை ஏற்படுத்தினர்.

1995 இல் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்தபோது சமஷ்டி முறையிலான தீர்வை சிபாரிசு செய்தார். ஆனால் திருமலை கடல் பிரதேசத்தில் கடற்படை மீது தாக்குதல் தொடுத்து அந்த முயற்சியை சீர்குலைத்தனர். கைகூடாமல் செய்தனர்.

செப்டம்பர் 11க்கு பிந்திய புதிய சூழ்நிலையில் ரணில் அரசுடன் சமாதானத்திற்கு சென்றனர். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை மாற்று அரசியல் கட்சியினர், அரச உத்தியோகத்தினர், படையினர், பொலிசார் என பலதரப்பினரையும் படுகொலை புரிந்து வருகிறார்கள். சுனாமி பேரனர்த்தம் ஏற்பட்டு கடலோர கிராமங்கள் அள்ளுண்டு போன பின்னரும் படுகொலைகளும் சிறுவர் சிறுமியரை அணிதிரட்டுவது மாத்திரமே அவர்களின் நிகழ்ச்சி நிரலில் பிரதானமாகக் காணப்படுகிறது.

1980களின் இறுதிப்பகுதியிலும் சரி 1990களின் நடுப்பகுதியிலும் சரி இந்த 2000 மாம் ஆண்டுகளின் முற்பகுதியில் ஆரம்பித்த யுத்தநிறுத்தத்தின் போதும் சரி, புலிகள் ஆயுதங்களையும் பணத்தையும் திட்டிக்கொள்வதிலும் தமது அரசியல் எதிர் சக்திகளை படுகொலை செய்வதிலும், கட்டாய ஆள்திரட்டலில் ஈடுபட்டனர். மக்களுக்கென்று எதுவுமே மிஞ்சவில்லை. மக்களின் நிலை மேலும் மேலும் மோசமடைந்து சென்றது.

அவர்கள் மானிடக் கனவை அல்ல ஒரு பாசிச கனவையே கொண்டிருக்கிறார்கள். வடக்கு கிழக்கை மனித சஞ்சாரமற்ற பாசிச அதிகாரம் தலைவிரித்தாடும் ஒரு மயான பூமியை அவர்கள் அவாவுற்றிருக்கிறாகள்.

# சுனாமி கட்டமைப்பு......

01ம் பக்கத் தொடர்ச்சி

சோமாலியாவில், ருவண்டாவில், பொஸ்னியாவில் எல்லாம் நிவாரணப் பணிகளுக்கு உதவியவர்கள் அவர்கள் அவர்களுக்கு தெரியாதா என்ன?

அவர்கள் கூறுகிறார்கள், புலிகளுடன் இணைந்து செயற்படுங்கள் என்று. தற்போது அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க சுனாமி கட்டமைப்பு உருவாயிற்று.

3 பிரதிநிதிகளை கொண்ட அதி உயர் கமிட்டி அதில் அரசு, புலிகள், முஸ்லீம்களின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

சுனாமி நிவாரணப் பணிகளுக்கான கொள்கைகள் திட்டங்களை இந்த கமிட்டி வகுக்கும்.

இரண்டாவது நிலைக் கமிட்டி. இதுவே முக்கியமான கமிட்டி. இதில் 5 புலிகள் 3 முஸ்லிம் பிரதிநிதிகள் 2 அரச பிரதிநிதிகள் இருப்பார்கள். இவர்கள் தான் வடக்கு கிழக்கில் சுனாமி நிவாரணப்பணிகளை முன்னெடுத்துச் செல்வார்கள். இதற்கு கீழ் மாவட்ட கமிட்டி. இது நிலமைகளை பற்றிய அறிகைகளை இந்த பிராந்திய கமிட்டிக்கு அனுப்பலாம்.

இந்த பிராந்தியகமிட்டி கிளிநொச்சியில் இருந்து இயங்கும்.

**ஆனால் துரதிஸ்டம் என்னவென்றால் 15 வருடங்களுக்கு முன்னர் முஸ்லீம்களை உடுத்த துணியுடன் வெளியேற்றியவர்களிடம் புலிகளின் இராசதானிக்கு சென்று சுனாமியால் நாங்கள் இறந்து போனோம். அகதியானோம் என்று இரக்க வேண்டிய நிலை முஸ்லீம்களுக்கு.**

**மட்டு அம்பாறை கரையோரங்களில் மரணித்துப் போன வெவ்வேறு அரசியல் அபிப்பிராயங்களை கொண்ட தமிழர்களதும் சிங்களவர்களதும் நிலை இது தான்.**

ஜனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்தவரை அவருடைய நிலை புரிந்து கொள்ளக் கூடியதே. 1994இல் அவர் பதவிக்கு வந்த போது தமிழ் மக்களுக்கு சமஸ்டிமுறையிலான அதிகாரப் பகிர்வை முன் மொழிந்தார். இனப்பிரச்சினைக்கு சமாதான வழியில் தீர்வு காண முற்பட்டார். ஆனால் புலிகளும் ஐ.தே.க.வும் அதனை நிராகரித்தனர். 2000 ஆம் ஆண்டு அதிகாரப்பகிர்வு யோசனைகளை பாராளுமன்ற மேசையில் ஐ.தே.காவினர் தீயிட்டனர்.

இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்விற்காக அவர் கடந்த ஒருதசாப்தத்தில் மேற்கொண்ட முயற்சிகள் முக்கியமானவை.

காலஞ்சென்ற அமைச்சர் அஷ்ரப் பின் காலத்தில் முஸ்லீம் சமூகத்தின் கோரிக்கைகள் தொடர்பிலும் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை உருவாக்குவதிலும் சந்திரிகா அவர்களின் தலைமையிலான பொதுஜன முன்னணி அரசு முக்கியத்தும் வாய்ந்த பங்களிப்பை ஆற்றியிருந்தது.

ஆனாலும் இனப்பிரச்சினைக்கு தீவு காண முடியவில்லை. சந்திரிகா அவர்கள் ஒரு நிலையான தீவு பற்றி அக்கறை கொண்டிருந்தார்.

புலிகள் ஏக அதிகாரம் கேட்டார்கள், கடல் உட்பட இடைக்கால நிர்வாகம் கேட்டார்கள். பின்னர் சுனாமி கட்டமைப்பு கேட்டார்கள். சர்வதேச அழுத்தமும் அதிகமாக இருந்தது.

ஆனால் கிணறு வெட்ட பூதம் புறப்பட்ட கதையாக புதிய பிரச்சனைகள் தலைதூக்கின. நடைமுறைபடுத்துவதில் பலவேறு நியாயபூர்வான பிரச்சனைகள் எதிர்நோக்கப்படுகின்றன.

ஜே.வி.பி.யினரைப் பொறுத்தவரை அவர்கள் புலிகளிடம் நாட்டின் ஒருபகுதியின் தலைவிதி சென்று விடுமோ என அஞ்சுகிறார்கள். அவர்களின் அச்சம் அக்கறைக்குரியது. உண்மையில் நோர்வேயின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தம் தற்போதைய சுனாமி கட்டமைப்பு வரை மறுசீரமைப்பிற்கு உள்ளாக்கப் படவேண்டும் என்று கருத இடமுண்டு. கண்ணோட்டம் அவ்வாறு கருதுகிறது.

அது நியாயமான தெளிவான மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த சில உண்மைகளை யதார்த்தங்கள அடிப்படையாகக் கொண்டது.

ஜனநாயகம், பன்மைத்துவம், சமூகங்களின் தனித்துவத்தை அடிப்படையாக வைத்தே அது அவ்வாறு வலியுறுத்துகிறது. எந்த இடத்திலும் நெருடல் இருக்குமாயின் அது செப்பனிடப் படவேண்டும்.

விண்வெளிக்கு அனுப்பப்படும் ரொக்கட்டின் சகல கருவிகளும் சரியாக செயற்படாவிடால் அது எங்கோ ஓர் இடத்தில் வெடித்துச் சிதறி விழலாம்.

சமூகம் தொடர்பாக அதிகார பூர்வமாகச் செயற்பட சில நெறிமுறைகள் கடைப்பிடிக்கப்படாவிட்டால் அங்கு பாரிய பிரச்சனைகள் உருவாகும்.

சுனாமியால் நாடளாவிய அளவில் 50வீதமும் வடக்கு-கிழக்கில் 60 வீதமும் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களின் பிரதிநிதித்தும் உரிய முறையில் செயல்படுத்தப்படுவதும், அவர்களுக்கு சேர வேண்டிய உதவிகள் நியாய பூர்வமாக கிட்டவேண்டும் என்பதும் முக்கியமான சமூக எதிர்பார்ப்பாகும்.

அதேபோல் தமிழ் மாற்று கருத்துக் கொண்டோர் வடக்கு-கிழக்கில் செயற்பட முடியாதென்ற நிலை புலிகளால் தொடர்ந்து படுகொலைகள், அச்சுறுத்தல் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமக்கு பிடிக்காத கட்சியினரையும் தமக்கு பிடிக்காத மக்களையும் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் பூண்டோடு அழிப்பதற்கு சுனாமி கட்டமைப்பினூடான அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு விடக்கூடாது அது இன்னுமொரு சமூக ஆதங்கம்.

சுனாமி கட்டமைப்பல் புலிகளுடன இணைந்து கொள்ளுங்கள் வரவேற்கிறோம் என்று, நாளும் பொழுதும் அழுத்தம் கொடுத்த சர்வதேச சமூகமும், ஐ.நா.வின் செயலார் நாயகம் கொபி அனானும் நாளும் பொழுதும் நிகழும் படுகொலைகள் பற்றி உறுதியாக எதுவும் தெரிவிக்காமல் இருப்பது துரதிஸ்டமானதே. இந்த நாட்டில் யாருக்கு என்ன அபிப்பிராயம் இருந்தாலும் புலிகளின் அபிப்பிராயமே முக்கியமானது.

எதற்காக இவ்வாறு? அவர்களிடம் மிகப் பெரிய யுத்த யந்திரமும் பணமும சர்வசே அளவில் பயங்கரவாதத்தை புரியக் கூடிய சத்தியும் சீர்குலைவு வேலைகளில் ஈடுபடும் வல்லமையும் இருக்கிறது என்பதனாலா அல்லது தமிழ் சமூகத்தின் மீதுள்ள கருணையினாலா தமிழ் மக்கள் மீது சர்வதேச சமூகத்திற்கு உண்மையான அக்கறை இருக்குமானால் புலிகளிடமிருந்து தமிழ் மக்களில் ஒரு சாரார் சுதந்திரம் பெற உதவ வேண்டும்.

தமிழ்மக்கள் தமது விருப்பம் போல இலங்கையின் அனைத்து இன மக்களுடனும் இணைந்து வாழ அனுமதிக்கப்படவேண்டும். தமிழ் மக்கள் புலிகளின் கண்காணிப்பிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். இதுவே தமிழ் சமூகத்திற்கு செய்யக் கூடிய அதி சிறந்த நற்காரியமாக இருக்கமுடியும்.

புலிகளின் பிடியிலிருந்து தமிழ் சமூகம் விடுவிக்கப்படும் அந்த கணத்தில் தமிழ் மக்களின் உணர்வின் வெளிப்பாடுகள் உலகை வாயடைக்க வைத்து விடும்.

## தோழர்களே, நண்பர்களே, வாசகர்களே!

**அபிப்பிராயங்கள், விமர்சனங்கள், ஆலோசனைகளையும், ஆக்கங்களையும் கண்ணோட்டம் வரவேற்கிறது.**

**அனைத்து நேரடித் தொடர்புகளுக்கும்:-**


**E.P.I.C., Box No: 95**
**95144 Garges Les, Gonnesse Cedex, France.**

**E.P.I.C., Box No: 0362**
**71603 Ludwigsburg, Germany.**

**B.M. Box No: 1738**
**London - Wcix - 3nn, U.k.**

**P - Fach No: 506**
**Bern - 17, Switzerland.**

**P - Box No: 7183**
**Arumpakkam, Chennai - 106, India.**

**310 ஆஸ்பத்திரி வீதி**
**யாழ்ப்பாணம்.**
☎ 021 222 2022,

**29 ஏ, வாவிக்கரை வீதி**
**மட்டக்களப்பு.**
☎ 065 22 25179

**No: 159, கடல்முக வீதி**
**திருகோணமலை.**
☎ 026 22 27118

**141A, மன்னார் ரோட்**
**குருமன்காடு, வவுனியா.**
☎ 024 22 23102

**சென்செபஸ்த்தியார் வீதி**
**மன்னார்.**
☎ 023 22 32822


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் புலிகளின் தொடர் பிஸ்டல்- கிளைமோர், படுகொலைகள் பிரிட்டனில் அல் ஹைதா தொடர் குண்டு வெடிப்பு- பஸ்களிலும், ரயில்களிலும்

2005 ஜுலை 7ம் திகதி 2001 செப்டம்பர் 11 க்கு பிந்திய ஐரோப்பிய வட அமெரிக்க நாடுகளில் பேரதிர்ச்சியை ஏற்படுத்திய இன்னுமொரு சம்பவம்

பிரிட்டிஷ் பிரதமர் லண்டனில் நிகழ்ந்த தாக்குதலை காட்டுமிராண்டித்தனம் என வர்ணித்துள்ளார். பயங்கரவாதிகள் எவ்வாறு உறுதியாக இருக்கிறார்களோ அதைவிட மேலாக எமது விழுமியங்களையும் வாழ்க்கை முறையையும், பாதுகாக்க நாம் உறுதி கொண்டுள்ளோம் என உடனடியாக தமது பிரதிபலிப்பை தெரிவித்துள்ளார்.

ஐ.நா பாதுகாப்புச்சபை உடனடியாக கண்டன அறிக்கையை விடுத்துள்ளது. ஜி 8 நாடுகளின் கூட்டத்தில் கலந்துகொள்ள பிரிட்டன் சென்றிருந்த இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நீண்டகாலமாக பயங்கரவாத கொடூரத்தை இந்திய அரசு அனுபவித்து வருவதை சுட்டிக்காட்டி பயங்கரவாதத்திற்கு எதிராக ஒருங்கிணைந்து செயற்படவேண்டியதன் அவசியத்தைத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முழு வீச்சில் தொடங்கப்பட வேண்டுமென மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார்.

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி மற்றும் ஐரோப்பிய வட அமெரிக்க நாடுகளின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளன. இத்தாலியிலும், டென்மார்க்கிலும் குண்டுகள் வெடிக்கலாமென அல்ஹைதாவினாலும், வேறு குழுக்களாலும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் ஆசியர்கள் பயங்கரவாதத்தினுள்ளே அதன் வாழ்க்கைகள் அதன் கொடூரத்தை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் லண்டனில சுரங்க ரயில் பாதைகளிலும், பஸ்களிலும் மனிதர்கள் பலி கொள்ளப்பட்டார்கள்.

இலங்கையில் கட்டம் கட்டமாக மக்களையும் அரசியல் தலைவர்களையும், கல்விமான்களையும் பயங்கரவாதம் நாளாந்தம் காவுகொண்டு வருகிறது.

இந்த பாசிச பயங்கரவாதிகளின் விளக்குமாற்றுக்கு குஞ்சம் கட்டுவது போல் இந்த ஐரோப்பிய நாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு காவடி எடுத்துச் சென்று பார்ப்பதும்,ஐரோப்பிய நாடுகளின் தலைநகரங்களுக்கு அழைத்து இராஜதந்திர மரியாதை செய்வதும், அவர்களின் ஆயுதக்கடத்தல், பணத்திரட்டல், போதைவஸ்து வியாபாரம் போன்றவற்றை கண்டும் காணாமல் இருப்பதும் இங்கு பாரிய பிரச்சினையாகும்.

இலங்கை அரசை, சுனாமி நிவாரண பணிகளை புலிகளுடன் பகிர்ந்து கொள்ளுமாறு இந்த ஐரோப்பிய வட அமெரிக்க, ஜப்பானிய அரசுகளும். உலக வங்கி போன்ற அமைப்புக்களும் அழுத்தம் கொடுத்தார்கள். ஆனால் மறு பக்கம் புலிகளின் நாளாந்த படுகொலைகளை சர்வதேச அறிக்கைகள் மூலம் கண்டித்தார்கள். சிறுவர்களை யுத்தத்திற்கு அணிதிரட்ட வேண்டாம் என்று நயமாக கேட்டார்கள். ஆனால் எடுத்துரைக்கவில்லை. எச்சரிக்கவில்லை.

புலிகள் சிறுவர், சிறுமியரை தற்கொலை குண்டுகளாக்கி அணிவகுப்பு நடத்துகிறார்கள். இலங்கை பூராவும் தற்கொலை குண்டுகளை விதைத்துள்ளார்கள்.

பிரித்தானிய மக்கள் இரண்டாம் மகா உலக யுத்தத்தின் பின்னர் இத்தகைய அனர்த்தத்தை இப்போதுதான் சந்தித்திருக்கிறார்கள். ஐரிஸ் குடியரசு இராணுவம் அவ்வப்போது தாக்குதல்களை நடத்தியிருப்பினும் இத்தகைய பேரழிவு நிகழவில்லை. கடந்த வருடம் மார்ச் இல் ஸ்பெயின் மட்ரிட் சுரங்க ரயில் பயங்கரவாத தாக்குதல்களில் 190 பேர் கொல்லப்பட்டனர்.

லண்டனில் நிகழ்ந்த தாக்குதலில் ஒரு தாய் தன்னையும் பிள்ளையையும் காப்பாற்றுமாறு அவலக்குரல் எழுப்பியதாக உயிர்தப்பிய பயணி ஒருவர் தெரிவித்துள்ளார். ஆயிரம் பேர் வரை காயமடைந்துள்ளனர். இறந்தவர்களின் தொகை அதிகரித்துச் செல்கிறது.


எந்த அனுபவமும் நேரடியாக இல்லாதவரை பலரும் அதனை புரிந்துகொள்வதில்லை. இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, போன்ற நாடுகள எத்தகைய துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றன என்பது இந்த மேற்கு தேசங்களுக்கு விளங்குவதாக இல்லை.

தென்னாசியாவில் பிரபாகரன் மிக ஆபத்தான பாசிச பயங்கரவாதி என்பதில் யாருக்கும் ஐயம் இருக்க வேண்டியதில்லை. இந்த பாசிச புலி இயக்கம் தென்னாசியாவில் ஜனநாயகத்தின தலைவர் ராஜீவ்காந்தி அவர்களை தற்கொலை பெண் குண்டுதாரிமூலம் படுகொலை செய்தது.

2001 செப்படம்பர் 11 அமெரிக்கருக்கு நேரடியாக புரிந்தது. பயங்கரவாதம் இஸ்லாமியவகைப்பட்டது மாத்திரம் என்று வரையறுப்பது பாரிய தவறாகும்.

இஸ்லாமிய வகைப்பட்டது மாத்திரம் அல்ல. அனைத்து வகையான இனவாத, மதவாத அடிப்படையில் உருவாகும் பயங்கரவாதங்கள், 2000ம் தசாப்பத்தத்தின் நாகரிகமான மனித வாழ்விற்கு சவாலாக அமைகின்றது.

இந்தோனேசியா பாலித்தீவில் குண்டு வெடித்தபோது அதில் இந்தோனிசியர்களும், அவுஸ்திரேலியர்களும், மற்றும் ஐரோப்பிய வட அமெரிக்க உல்லாச பிரயாணிகள் கொல்லப்பட்ட போது இந்தோனேசிய பாதுகாப்பு கட்டமைப்பு தொடர்பாக அதிருப்தி வெளியிட்ட இந்த ஐரோப்பிய நாடுகள் உலகிலேயே உச்ச தொழிலநுட்பமும், பாதுகாப்பு கேள்விக்குள்ளான லண்டன் மாநகரில் நடந்த தாக்குதலுக்கு என்ன கூறப் போகிறார்கள்?



இந்த பயங்கரவாதத்தை மக்களுக்கு இடையேயான மோதலாக நாகரீகங்களுக்கு இடையேயான யுத்தமாக பிரச்சாரமாக செய்யாமல் உலகின் அனைத்துவிதமான மனித குல விரோத செயற்பாடுகளையும் அதன்மூல ஊற்றுக்களையும் முடிவுக்கு கொண்டுவர முயல வேண்டும்.

புலிகள் வடக்கு கிழக்கு தெற்கு மேற்கு என எட்டு திக்கும் படுகொலை புரிகிறார்கள். அவர்களின் கொலை வெறி சுனாமி அகதி முகாம்களிலும் உட்புகுந்துள்ளது. சிறுரக ஆயுதங்களை வாகனங்களில் போட்டுக்கொண்டு கொழும்பு போன்ற நகரங்களில் அவர்கள் சௌகரியமாக சுற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

போதாக்குறைக்கு கொலை புரிவதற்கான பிரயாணங்களிற்கு ஹெலி, வாகன ஊர்தி அரச பாதுகாப்பு வேண்டுமென்கிறார்கள்.

தமது ஆலோசனைக் கூட்டங்களுக்கு செல்வதற்கு இத்தகைய வசதிகளை பெறுகிறார்கள்.

அல்ஹைய்தாவிற்கு அவர்கள் எந்தவிதத்திலும் குறைந்தவர்கள் அல்ல. இலங்கையர்களை ஏன் இந்திய மக்களின் அனுபவத்தில் கூட அல்ஹைதாவை விட ஒரு படி மேலான பயங்கரவாதிகளே இவர்கள்.

கப்பல்கள் மீது தாக்குதல் தொடுப்பது தொடர்பாக தாம் சர்வதேச அனுபவங்களில் இருந்து கற்றுக்கொண்டதாக புலிகளின் கடற்புலி சூசை சர்வதேச ஊடகங்களிற்கு தெரிவித்துள்ளார்.

இனியாவது உலகம் விழித்துக் கொள்ள வேண்டும். எந்த தயவு தாட்சணியமும் பயங்கரவாதத்திற்கு இல்லை. நாகரீகமான மனித வாழ்வு மாத்திரமே முதன்மையானது என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட ரொரிண்டன் வாழ் மக்களிற்கும் அவர்களின் குடும்பத்தாருக்கும் தமிழ் நியூஸ் வெப் தளம் தனது இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. காயமடைந்தவர்கள் சுகமடைய பிரார்த்திக்கிறோம்.

நன்றி: தமிழ் நியூஸ் வெப் தளம்

# இந்தியாவின் உற்ற நண்பன் தோழர் க. பத்மநாபா

எதிலும் தன்மை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது கொள்கை வழி நின்று ஸ்தாபன நெறிமுறைகளை கடைபிடித்து செயல்பாடுகளை நிறை வேற்றுவதிலேயே உறுதியாக நின்ற உண்மையான மாபெரும் புரட்சியாளனாக திகழ்ந்தார் பத்மநாபா

தன் இயக்கத்தின் தோழர்கள், அவர்கள் எத்தகைய பண்புகளையும், திறமைகளைக் கொண்டிருந்தாலும் உருக்கண்டு அவர்களுக்குள்ளேயே புதைந்து கிடக்கும் திறமைகளை கூர்மையாக உய்த்துணர்ந்து அவர்களை உற்சாகப்படுத்துவதுடன் அவர்கள் மீது கட்டுக்கடங்காத பாசத்தை பொழிந்த பாசமலர் பத்மநாபா. ஒவ்வொரு தோழரின் நலனிலும் நேரிடையாக அக்கறை செலுத்திய தலைமைப் பண்பை பெற்றிருந்தார்.

தானோ தனது இயக்கத்தவர்ளோ எத்தகைய சூழலிலும் தாங்கள் மேற்கொள்ளும் செயல்பாடுகளில் எல்லாவற்றிலும் மனித நேயம் என்பதையே கட்சியின் ஒரு கட்டளையாக ஏற்படுத்திய மனிதநேயர்.

ஒடுக்கப்பட்ட சகல தரப்பு மக்களின் சார்பிலிருந்தே தனது சிந்தனை வலைகளை விரித்தவர். கம்யூனிஸ்டுக்களுக்கு மாமேதை லெனின் கூறிய மக்களிடமிருந்தே கற்றுக்கொள்ளுங்கள். மக்களுக்கு கற்பியுங்கள் என்ற மகத்தான சிந்தனை கூற்றை பின்பற்றி அடக்கமாய் ஒரு மாணவன் போன்று எல்லோர் சொல்லையும் கூர்ந்து கவனித்து அவற்றிற்கு உரிய மரியாதையை வழங்கிய பண்பாளர்.

தான் ஏற்றுக் கொண்ட லட்சியத்தின் மீது அவருக்கு இருந்த பற்றும், அதனை அடைவதறகாக அவர் மேற்கொண்ட விடாமுயற்சிகளும் அவரது தலைமைக் குணத்தை தனியே எடுத்துக்காட்டின. இலட்சியத்தை அடைவதற்கான போராட்டப்பாதை சுலபமான நேரான தன்மையைக் கொண்டதல்ல என்பதையும், [illegible] சுழிவுகளையும், மேடு பள்ளங்களையும் சந்திக்க வேண்டியுள்ளதையும் பத்மநாபா உணர்ந்திருந்தார்.




நினைவு அஞ்சலி
07.07.2005

தோழர்கள்

இமாம் - சாவகச்சேரி

அசோக் - இளவாலை

சுகிர்தன் - கல்லியங்காடு

ஞானம் - மட்டக்களப்பு

எட்வேட் - கோப்பாய்

நாகராஜா - திருகோணமலை

ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா



ஈழ மக்களின் நலன், இந்தியாவின் நலன், இந்து மாக்கடல் அமைதி, ஆகிய மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத படிபின்னிப் பிணைந்திருப்பதை மிகத் தெளிவாக அவர் உணர்ந்திருந்தார்.

அவரது இழப்பு தெற்காசியப் பிராந்தியத்தில் மிகப்பெரிய அரசியல் வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்பது மறுக்க முடியாத உண்மை.

நன்றி – ஜீவா முழக்கம்
சென்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசத்தை நேசித்து......

ஈழ விடுதலைக்கான போராட்ட வரலாற்றின் ஆரம்ப காலத்தில் இருந்தே தங்களை முழுமையாக அர்ப்பணித்து பல சந்தர்ப்பங்களில் பலதரப்பட்ட இழப்புக்கள், துயரங்களுக்கும் முகம் கொடுத்து, நமது தேச விடுதலைக்காக இழப்பதற்கு உயிர் மட்டுமேயன்றி உணர்வுகள் யாவும் ஈழவிடுதலைக்காக அர்ப்பணத்துவிட்டோம் என்ற திடமான, உறுதியான மனநிலையிலும் அயராது தேசத்தின் இன விடுதலைக்காக உழைத்து, அரசியல் ரீதியாகவும் ஆயுதரீதியாகவும் பலம் பொருந்திய ஓர் அமைப்பாக வளர்ச்சியடைந்துவரும் காலகட்டத்தில் அவற்றைப் பொறுத்துக்கொள்ள முடியாமலும் ஏற்றுக்கொள்ள முடியாமலும் பதுங்கியிருந்த பாசிச வாதிகளின் சகோதர அழிப்பு வலையில் சிக்கி மாண்டுபோன எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரித்தான தோழர்கள்,

மேலும் இந்தப் பாசிசவாத இயக்கம் ஒன்றினால் பல சித்திரவதைகளை அவர்களின் பாசிச வதைமுகாம்களின் உள்ளேயும் வெளியேயும் அனுபவித்து, தங்கள் உயிரைக்கூட பாசிசத்தின் பிடியிலிருந்து பாதுகாக்க முடியாமல்! "தன் இனத்தாலே" தாம் பலியெடுக்கப்படுவதை, அதனால் தாம் அனாவசியமாக அழிந்து விடுவதை விரும்பாது தேசத்தின் விடுதலையை தொலைத்துவிட்ட நமது தேசத்து மனிதர்களை எண்ணி தொலைதூரத்தில் நின்று, தூரத்துத் துயரஙகளை மட்டும் அன்றாடம் அறிந்துகொண்டிருக்கும் புலம்பெயர்ந்து வாழ்ந்துவரும் தோழர்கள்.

மற்றும் தன் இனத்துக்குள்ளேயே உள் வீட்டிலும் மிகவும் நாகரீகமற்ற முறையில் பாசிசவாதிகளின் தவறான வளர்ப்பு முறைகளுக்கும் வழி நடத்தல்களுக்கும் அடிபணிந்து சொந்தச் சகோதரர்களையே வெட்டிக்கொலை செய்யும், கீறிக் கிழித்துப் பார்க்கும், தன் இனத்தையே காணப்பிடிக்காத நாய்களை விடக் கேவலமான கொலைக் கலாச்சாரத்துக்கு அடிமையாகி, சகோதரப்படுகொலைகள் ஆரம்பித்துவிட்ட வரலாற்றுக் கொடுமையை கண்டு சகித்துக்கொளள முடியாமலும், பாசிசத்தின் பூதாகரமான வளர்ச்சியைக கண்டு மனமுடைந்து மரணங்களைத் தவிர்த்துக்கொள்ள மாற்றுவழியேதுமின்றி மாற்றான் தேசத்தில் தஞ்சமடைந்து, "எமது தேசத்தை சகோதரப் படுகொலைகள் மூலம் பல கூறுகளாகப் பிளவுபடுத்திய, பலநூற்றுக்கணக்கான மனிதர்களைக் கொன்று குவித்த, மற்றும் இந்த நாட்டின் விடுதலைக்காக தங்களையும் அர்ப்பணித்து செயல்பட்டு வந்த பல தியாக சிந்தனையாளர்களை அவர்களின் தலைவர்களையும் கொன்று குவித்துவிட்ட" மனித உணர்வுகளுக்கு அப்பாற்பட்ட ஒரு விலங்கினம் இங்கு உருவெடுத்துள்ளதை சகித்துக்கொள்ள முடியாது, தேசத்தை விட்டு எங்கோ தொலை தூரத்தில் இருந்து தங்கள் குரல்களை மட்டும் ஒலித்துக்கொண்டிருக்கும் நமது தேசத்தின் பற்றுக்கொண்ட, எமக்கு பல வழிகளிலும் போராட்ட காலத்திலும் இன்றும் தொடர்ந்தும் பங்காற்றிவரும் எமது தேசத்தின் மக்கள்.

அடுத்து வடக்குக் கிழக்கு காட்டுமிராண்டிக் குழுவினாலும் அதன் சகாகளினாலும் துரோகியென்றும் எட்டப்பரென்றும் பாசிசவாதிகளால் பெயர்சூட்டப்பட்டு கொலைசெய்யப்பட்டு மரணித்துப்போன தங்கள் பிள்ளைகளை ஏதோ ஒரு பிசாசு பலிகொண்டு விட்டது என்ற மனப்போக்கில் தங்களின் கொல்லப்பட்ட பிள்ளைகளுக்காக அவர்களது மரணத்தின் கால நினைவுகளையோ, கிரியைகளையோ கொலை செய்யப்பட்ட கொடூர நாட்களையோ நினைவுகூர, முடியாமல் வெளியில் சொல்ல முடியாமல், தங்கள் பிள்ளைகளின் இறப்புக்களை எண்ணி இன்றும் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கும் அவர்களது தாய் தந்தையர் சகோதரர்கள் அனைவருக்கும்,

மரணித்த உங்கள் பிள்ளைகள் சகோதரர்கள் அனைவரது துயரங்களுடன் நாம் வாழ்கின்றோம், எங்கள் மனங்களிலிருந்து அவர்கள் மரணிக்கவில்லை "நாம் மரணிகதும் வரையும், ஜனநாயகம்,மனித உரிமைகள் இவ்வுலகில் முற்றுமுழுதாக மறுக்கப்படும் வரையும் பாசிசம் தோற்கடிக்கப்படும் வரையும்" ஜனநாயகத்துக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் பாசிசத்துக்கு எதிராகவும் நாம் குரல்கொடுப்போம் எழுதுவோம். எங்கள் தோழர்களும் உங்கள் சகோதரர், பிள்ளைகளுக்காகவும் எமது துக்கங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்வோம் என்றும் நாம் உங்களுடன் சேர்ந்திருப்போம், நாம் மனிதனாகப் பிறந்ததன் அர்த்தத்தைத் தேடிக்கொள்வோம்.

பயங்கரவாதத்தின் காலடியில் மண்டியிட்டுக்கிடக்கும் "மாற்றுக்கட்சிகளில் பிரிந்த" மலினப்பட்ட மனிதர்கள்போல் வாழாது, மாண்டுவிடுவதே மேல், என்று மரித்துப்போன எமது மகத்தான தோழர்களை அவர்களின் தியாகங்களை நாம் என்றுமே மறந்ததுமில்லை மறக்கவுமில்லை

டாக்டர்கள், விரிவுரையாளர்கள் பொறியியலாளர்கள், தலைசிறந்த எழுத்தாளர்கள் சிறந்த கலைஞர்கள் கவிஞர்கள் தொழில் நுட்ப வல்லுனர்கள், என பலதரப்பட்ட புத்திஜீவிகளும் அறிஞர்களும் இந்நாட்டில் இவர்களுக்கு இடமில்லை, வாழ்க்கையில்லை என்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் மட்டுமல்ல மாற்று ஜனநாயகக்கட்சிகளாக இருந்த ரியூஎல்எவ் போன்ற கட்சிகளின் தலைசிறந்த தலைவர்களான அ. அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், நீலன்திருச்செல்வம் என் இவர்களின் பட்டியலைக்கூட அடுக்கிக்கொண்டே போகலாம். இது தவிர மற்றைய கட்சிகளான புளொட், ஈ.பி.டி.பி.,ரெலோ போன்ற கட்சிகளின் பட்டியலும் எண்ணிலடங்காதவை.

இவர்களெல்லாம் கொல்லப்பட்டது யாரால்? இவர்களைக் கொன்றவர்களின் தகமைகள்தான் என்ன?

விலை மதிக்க முடியாத இந்த மனிதர்களைக் கொன்று குவித்த குறைப்பள்ளி முடித்த கூர்ப்படையாத இந்த விசர்நாய்களிடம் உயிர்களின் பெறுமதியும் புரிந்துவிடுமா?

பனி, மழை பொழிந்தாலும் பள்ளிக்கூட வாசல் ஒதுங்கமாட்டோம் என அடம்பிடிக்கின்ற கொலைப்பட்டியலிடும் பட்டதாரிகளினால்த்தான் இவர்கள் கொல்லப்பட்டார்கள். என்றால், படித்த சமூகத்துக்கும் பண்புள்ள மானுடர்க்கும் நீங்கள் கொடுக்கும் மரியாதையோ அல்லது உங்கள் மனதில் அவர்கள் பற்றிய கருத்துக்கள் தவறானதென்றால் கற்றவர் சமூகமே, கல்விமான்களே! புறப்படுங்கள் அனைவருமே அம்புவில்லுடன் காட்டுக்குப் போவோம் காட்டுவாசிகள்தான் நாட்டையாளவேண்டுமென்றால் நீங்கள் காட்டில்தான் வாழவேண்டும்! உங்களால் அது முடியாவிட்டால் உங்கள் உண்மையான உணர்வை உள்ளே புழுங்குவதை விடுத்து வெளிக்கொண்டு வாருங்கள். இந்த நாட்டுக்காக இல்லாவிட்டாலும் உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அவர்களின் இனிமையன எதிர்காலத்தை எண்ணியாவது நீஙகள் மனிதர்கள்போல் சிந்தியுங்கள் என்பதை நாம் உங்கள் அனைவரையும் கேட்கின்றோம். இனி வரும் நூற்றாண்டிலாவது உங்கள் அடிகளை முன்நகர்த்துங்கள் காலத்தைப் பின்நோக்கி உங்கள் மூதாதையரை சந்திக்க நினைக்காதீகள் இனியும் நீங்கள் கல் உரசித்தான் பொறி காணவேண்டும் என்றெண்ணினால் நாகரீக உலகம் உங்களை மறந்து விடும்.



**சேரன், சோழன், பாண்டியன் என்று வரலாறு படைத்த தமிழ்த் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி தமிழர்களையே கொடூரக்கொலைகளினாலும் சகோதரப் படுகொலைகளினாலும் கொன்றுகுவித்து அத்தலைவர்களை கொச்சைப்படுத்தும் இவர்களுக்கு பொருத்தமான பெயரே இவர்களின் பொதுப்பெயர்தான். இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் போராடிய தலைவர்களின் பெயர்களை வைத்து இனத்தையே துவம்சம் செய்யும் இவர்கள் கலாச்சாரம் பற்றியும் தமிழ் பற்றியும் பேசிக்கொள்வது வேடிக்கையானது மட்டமல்ல வியப்பானதும் கூட.**

பின்நோக்கி நகர்ந்து பாதாளத்தில் வீழ்ந்துவிடுவதற்கு இன்னும் சிறிய தூரம்தான் உள்ளது என்பதை சற்றுத் திரும்பிப்பாருங்கள் அல்லது அங்குதான உங்களைக் காப்பாற்ற முடியும் என்றால் அங்கு வீழ்வதைத்தவிர உங்களுக்கு வேறு வழிகிடையாது.

கற்றவர்கள் எல்லாம் கருகிவிட்டார்கள், கல்வியென்றால் நாங்கள் கற்பிப்பதுதான் கல்வியென்று நாங்கள் வைப்பதுதான் பரீட்சையென்று காட்டுமிராண்டிததனமான சிந்தனைகளை வளர்ந்துவரும் சமுதாயத்துக்கு திணிக்கப்படுகிறது.

யாழ் மட்டுவில் பிரபல பாடசாலையொன்றில் காலை பிரேயர் நேரத்தில் [illegible] வாழ்த்துக்குப் பதில் புலி வாழ்த்துப்பாடும் காட்டுமிராண்டிக் கலாச்சாரம் அங்கு உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ்க் காலாச்சாரம் வட-கிழக்கில் தலைகீழாகிவரும் இக்காலகட்டம் எமது எதிர்கால சந்ததியினரை எங்கே கொண்டுபோய் விடப்போகின்றதோ தெரியவில்லை!. பாடசாலைகளில் இந்த நிலையென்றால் அந்த கிராமத்து மக்கள்கூட அதை ஏற்கவேண்டிய நிலை. பாடசாலைகள் மட்டும்தான் இப்படியென்று எண்ணிவிட முடியாது பல்கலைக் கழகங்கள்கூட இப்படித்தான் இன்று அதுகூட அவர்களின் கட்டுப்பாட்டில்ததான் அவர்களது வழிகாட்டலில்த்தான் இந்தப்பட்டதாரிகளின் ஊடுருவல் அதையும் விட்டு வைக்கவில்லை.

இறைவணக்கம் இன்று இரக்கமில்லாதவனைப் புகழ்பாடும் கொடுமையும், அரக்கனின் காலடியில், பள்ளிச் சிறார்களெல்லாம் தங்களின் இறைவனாக தியானிக்கும் மனிதனாக மாவீரர்களின் தலைவன் மரணதேவனும் வாழும் வரலாற்று மாற்றமும் இந்தநாட்டில் வாழும் நாகரீக சமுதாயத்தை தலைகுனிய வைத்துள்ளது.

இன்று வேறோர் பிரதேசத்தை நாம் இங்கு பார்க்கின்றோம், வெளிநாடுகளில் இருந்து பல வருடங்களுக்கு பிறகு நமது தாய்நாட்டுக்கு வரும் அனைவரும் ஏதோ பல கற்பனைகளுடன் வருகின்றார்கள். வந்து சேர்ந்ததும் வன்னிப்பாதையின் பயணம் அவர்களுக்கு இங்குள்ள நிலைமை பற்றிய தெளிவான உணமையை படம் போட்டுக்காட்டிவிடும். ஆரம்பத்திலேயே முதலில் வன்னியில் வரியென்ற பெயரில் கொடுக்கத் தொடங்கும் கப்பம் பின்பு கொடுப்பதெல்லாம் கொடுத்து முடிந்தவுடன் தொடரும் பயணம் அதற்கப்பால் வரவேற்புப் பலகைகள், கிளிநொச்சி உங்களை வரவேற்கின்றது, சாவகச்சேரி உங்களை வரவேற்கின்றது கடைசியில் யாழ்நகர் உங்களை வரவேற்கின்றது.

இதன் அர்த்தம், வாருங்கள் வாருங்கள் பணத்தைக் கொண்டு வாருங்கள் தாருங்கள் தாருங்கள் புலிகளிடம் தாருங்கள். என்பதற்கமைய வாயைத் திறந்தவண்ணம் தெரியும் புலியின் வரைபடங்கள் அதன் வரவேற்புத்தான் "கொடுத்ததெல்லாம் கொடுத்த மிச்சம் மீதியைக்கூட நாம் விடமாட்டோம். வீடுகளிலும் வைத்து எமது போராளிகள் என்னும் பெயரிலுள்ள கொள்ளைக்கூட்டத்தை அனுப்பி அதைக்கூட பறித்தெடுப்போம்" என்பதுதான் அடுத்தடுத்து வரும் இந்த வரவேற்புகள் காட்டி நிற்கின்றன. இப்படி பறிகொடுத்தவர்கள் பலர், ஆனால் அவர்கள் இதுபற்றி வாய்திறப்பதுமில்லை, மறுமுறை இலங்கைக்கு வரநினைப்பதுமில்லை.

வன்னியின் வரிப்பொயின்ரின் கப்பம் என்ற பொறியில் அகப்பட்டு அடம பிடிப்பவர்களெல்லாம் சாதாரணமாக பிணக்கின்றி அனுப்பிவைக்கப்படுவார்கள் ஆனால், அதன் பிற்பாடு அவர்களுக்கு நேரும் கதிதான் மிகவும் பரிதாபம் வெளிநாடுகளிலிருந்து வருபவர்கள் கொண்டுவரும் பொருள்களின் பெறுமதி, பணத்தின் பெறுமதி, மற்றும் அன்னாரின் அந்நாட்டு வாழ்க்கை வரலாறுகள் வசதிகள் யாவும் இவர்களின் வெளிநாட்டு ஏஜெண்டுகளால் உடனுக்குடன் வன்னிக்குத் தகவல் பரிமாறப்படுகிறது.

எனவே கொள்ளையடிப்பதும் கொலை செய்வதும் இவர்களின் கைவந்த கலையென்றாகிவிட்டபடியால் கொள்ளைக்காக கொலை செய்து தங்கள் இலக்கை அடைவதே தலைவனின் இலட்சியம்.

## கலாச்சாரம், சீர்கேடு

இங்கு எது காலாச்சாரம், எது சீர்கேடு, கலாச்சாரம் ஒன்று வாழ்ந்தால்தானே அதன் சீர்கேடுபற்றி சிந்திக்க முடியும் அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட, சர்வாதிகாரமாகத் திணிக்கப்பட்ட கலாச்சாரம் மனிதர்களுக்கு ஒவ்வாத கலாச்சாரமாகையால் மனிதர்களுக்கு அப்பாற்பட்ட உயிரினங்களுக்கு ஏற்புடைய கலாச்சாரத்தினை மனிதர்கள் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?அதன் சீர்கேடு என்று எதைச் சொல்லமுடியும்? இங்கு புலிகளால் வியாபார நோக்கத்துக்காக அறிமுகப்படுத்தப்பட்ட கலாசாரமானது மக்கள்தான் அதன் சீர்கேடுபற்றிப் பேசமுடியும். காரணம் அவர்களது வரலாற்றில் என்றுமே நிகழாத சம்பவங்கள் என்றுமே அறியாத விதிமுறைகள் அவர்களிடம் திணிக்கப்படுகிறது. உண்மையான அவர்களின் பாரம்பரிய கலை கலாசாரம் மழுங்கடிக்கப்பட்டுவிட்டது.

புதிதான கொலை, கொள்ளை கடத்தல், கப்பம் இது அவர்கள் வாழ்நாளில் என்றுமே காணாத கலாச்சாரங்கள். மக்கள் மனங்களில் திணிக்கப்பட்ட இக்கலாசாரம் உலகமே வன்மையாக கண்டிக்கும் கலாச்சாரம் இப்படி மிகவும் கண்டிப்புக்கு உள்ளாகும் கலாசாரத்தை அறிமுகப்படுத்திவிட்டு அதற்கு கலாசாரத்தைப் பேணும் குழு என்ற பெயருடன் ஒரு குழுவையும் நியமித்து, மேற்கூறப்பட்ட தங்கள் அத்தனை கலாசாரத்தையும் காப்பாற்ற எண்ணும் இந்தக்குழு மூலம் மக்களை தலையெடுக்க விடாது எல்லா வியாபாரத்தையும் செய்துகொள்ளும் புலிகள் கலாசாரம் என்றால் எதுவென்றே தெரியாத அவர்கள் அது பற்றிக் கதைக்கிறார்கள் என்றால் அதைப் பின்பற்றுவதும் மக்களின் தலைவிதியே!

கலாச்சாரம் பற்றியும் சீர்கேடு பற்றியும் கூறுவதற்கும் தகுதிகள் வேண்டும். பொதுவாக சொல்வதானால் அது மனித இயல்புகளோடு சம்பந்தப்பட்டது


இவர்கள் அறிமுகப்படுத்துவதான் கலாச்சாரமென்றால், இவர்கள் பேசுவதுதான் தமிழ் மொழியென்றால், கொடூரக் கொலைகளுக்கும் வாள் வெட்டுகளுக்கும், வெட்டுக்கொத்துகளுக்கும் புதிய இலக்கணம் கற்பிக்கும் இவர்களது பாஷையில் "மண்டையில போடு" என்பதுகூட இவர்களின் கொலை பாஷைதான்.இது எந்த மொழியில் சேர்ப்பது?, எந்தப் பண்பான கலாசாரத்தில் இவற்றைக் காண்பது? அது அவர்களின் நாகரீகமான மொழியென்றால் இதுபோன்ற பல மொழிகளை நாம் கற்றுக்கொண்டால்தான் வடகிழக்கில் வாழ முடியுமா?. உந்துருளியென்றும்,வெதுப்பகமென்றும்,ஒட்டகமென்றும் பெயர்கூறும் இவர்கள் தங்கள் பெயர்களையும் தமிழ் எல்லாவற்றிற்கும் முன்னால் தமிழ் சேர்த்துள்ளார்கள், ஆனால் தமிழருக்கென்றும் ஒரு கலாச்சாரம் பண்பாடு உண்டென்றதையும், கொலையில்தான் நிருபிக்கிறார்கள் எனவே இந்தக் கொலைக்கலாச்சாரமும், கொள்ளைக் கலாச்சாரமும், சகோதரர்களை வெட்டி கீறிக்கிழிப்பதும் இவையெல்லாம் தமிழனுக்குரியது. இந்தப் சிறப்புப் பண்புகள் அனைத்தும் நிறைந்தவன்தான் யாழ்ப்பாணத் தமிழன் என்பதையும் உலகுக்கு மிக இலகுவாக எடுத்துக்காட்டுகிறார்கள்.

சேரன், சோழன், பாண்டியன் என்று வரலாறு படைத்த தமிழ்த் தலைவர்களின் பெயர்களைச் சூட்டி தமிழர்களையே கொடூரக்கொலைகளினாலும் சகோதரப்படுகொலைகளினாலும் கொன்று குவித்து அத்தலைவர்களை கொச்சைப்படுத்தும் இவர்களுக்கு பொருத்தமான பெயரே இவர்களின் பொதுப் பெயர்தான். இனத்துக்காகவும், நாட்டுக்காகவும் போராடிய தலைவர்களின் பெயர்களை வைத்து இனத்தையே துவம்சம் செய்யும் இவர்கள் கலாச்சாரம் பற்றியும் தமிழ் பற்றியும் பேசிக்கொள்வது வேடிக்கையானது மட்டமல்ல வியப்பானதும் கூட. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பிராசா சுபத்திரன்

## றொபேட் தோழர்



### 25.12.1957 - 14.06.2003

தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகத்தை நிலை நாட்டுவதற்காகவும், இனங்களின் சமத்துவம் தமிழ், சிங்களம், முஸ்லீம் மக்களின் ஐக்கியம் பாரபட்சமற்ற, ஏற்றத்தாழ்வில்லாத சமூக அமைப்பு அவரின் அக்கறைக்குரிய விடயங்களாக இருந்தன.

சாதாரண தனி மனிதனின் தேவைகளில் இருந்து சமூகத் தேவைகள் வரை அவர் கரிசனை கொண்டிருந்தார். அமைதியும், எளிமையும், ஆளுமையும் அவரின் உயர்ந்த பண்புகள். எப்போதும் மலர்ந்த முகத்துடன் காணப்படுவார். பிரச்சினைகள் சவால்களைக் கண்டு அவர் அஞ்சுவதில்லை. துன்ப சாகரத்தின் அடியாழத்தில் வீழ்ந்து கிடந்தாலும் எழுந்து நிற்பதற்காக போராடுவார். நம்பிக்கைகள் ஒரேயடியாக தகர்ந்து போனாலும் அந்த நம்பிக்கை கீற்றை உருவாகக பாடுபடுவார். கொடுத்த வாக்கை காப்பாற்ற வேண்டும். நம்பியவர்களை நட்டாற்றில் விடக்கூடாது என்ற முன்மாதிரிகளை நாம் அவரிடமிருந்து கற்கவேண்டும். மலர்ந்த முகத்துடன் செயலாற்றும் றொபேட் தோழருக்கு கோபமும் வரும், ஆனால் அது சத்திய ஆவேசத்துடன், சமூக தார்மீக உணர்வுடன் சம்பந்தப்பட்டதாகவே இருக்கும். சோம்பி, துவண்டு போவது அவருக்கு அறவே பிடிக்காது. ஒவ்வொரு அதிகாலை பொழுதிலும் அவர் புத்தம்புது மனிதனாய் நின்று கொண்டிருப்பார்.

ஈ.பி.ஆர்.எல்.எப் இன் மாணவர் அமைப்பான ஈழ மாணவர் பொது மன்றத்திலிருந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் கடந்த கால வரலாற்றின் அரசியல், ஆயுத அமைப்பின் தலைவர்களில் ஒருவராக இருந்து சிறைச்சாலை, சித்திரவதை வடக்கு கிழக்கின் நீள அகலம் இந்தியாவில் எம் மக்கள் தஞ்சமடைந்த அகதி முகாம்கள், நவீன திரைப்படங்கள், கலை இலக்கிய நிகழ்ச்சிகள், நாடகபட்டறைகள், எங்கும் அவர் காணப்பட்டார். சமூகத்தின் தாங்கொணா துயரத்தை அவர் ஆழமாக கிரகித்தார். மனித வாழ்வின் உன்னதத்தை அவர் நேசித்தார். அவரது மனமும், அவரது உருவமும் ஆளுமை படைத்தவை காந்த சக்தி வாய்ந்தவை. தான் இந்த சமூகத்தின் மீது வைத்திருக்கும் அன்பையும் தோழர்கள் மீது வைத்திருக்கும் நேசத்தையும் பறையறைந்து தெரிவிப்பவரல்ல. அவரது மனம் அமைதியாக ஓடும் ஆற்றைப் போன்றது. அது சில சந்தர்ப்பங்களில் பிரவாகமாகவும் மாறும். சமூகத்தில் மனிதர்களுடன் கண்ணியமாக நற்பண்புடன் உறவாடினார். மாற்றுக் கருத்துக் கொண்டவர்களை மதித்தார். அவர்களது கருத்துக்கள் மீது, அவர்களின் நம்பிக்கைகள் மீது ஆக்கிரமிப்பை திணிக்கும போக்கு அவரிடம் இருக்கவில்லை.

அவர் ஜனநாயக உள்ளூராட்சி நிறுவனம் என்றவகையில் யாழ் மாநகர சபையில் அங்கத்தவராக செயற்பட்டபோது எமது சமூகத்தில் "வறுமையில் செம்மையாக வாழ்தல்" என்பார்களே அப்படி அவர் நடந்து காட்டினார்.

1980 இல் பேரினவாதத்தால் எரியுண்ட நூலகத்தை மறுநிர்மாணம் செய்வதில் மாநகரசபையின் ஏனைய உறுப்பினர்களுடன் சேர்ந்து தனது பங்களிப்பை அவர் செய்தார். அங்கு மாநகர சபையில் எவ்வாறு கருத்துக்களை முன்வைப்பது, எவ்வாறு வெவ்வேறு கருத்து நிலைகளை எதிர்கொள்வது, எவ்வாறு அறிக்கைகளை விடுப்பது எ்ன்பதில் அவர் ஒரு பாசிச சூழலில் பல பண்பாட்டு விழுமியங்களை தனது நடைமுறையினூடாக வெளிக்கொணர்ந்தார். மாநகர சபை உறுப்பினர்கள் அனைவருமே கட்சிகள், கொள்கைகள், வேறுபாடுகளுக்கு அப்பால் அவரை பெரிதும் நேசித்தனர்.

தமிழ் ஊடகங்கள் ஏற்கனவே புலிகளின் நிகழ்ச்சி நிரலுக்கு சென்றுவிட்டன. ஆனால் அவருடன் பழகிய பெருமளவு ஊடகவியலாளர்கள் அவரில் அலாதிப் பிரியம் வைத்திருந்தனர். சமூகத்தில் அவருடன் பழகிய மனிதர்களிடையே ஆகர்ஷிப்பை ஏற்படுத்தியிருந்தார். அவருடைய ஆளுமையும் கண்ணியமும் தர்க்கம் நிறைந்த நிதானமான கலந்துரையாடலும் பெரும் ஆகர்சிப்பாக அமைந்திருந்தது.

அவருடைய சொந்த கிராமமான சாவக்கச்சேரி நுணாவிலிலும் சரி, அயல் கிராமங்களிலும் சரி பல முதியவர்கள் "சுபா எங்கட பிள்ள" என்று வாஞ்சையுடன் அழைத்துக் கொள்வார்கள்.

அவர் பொது வாழ்விற்கு வரமுன்னர் சாவகச்சேரி, யாழ் மத்திய கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் கற்றபோது அவருக்கு பாலிய வயதிலிருந்தே,ஏராளமான நண்பர்கள் இருந்தார்கள். அவருடைய நண்பர்கள் பலர் பிற்கால கட்டத்தில் ஈ.பி.ஆர்.எல்.எப் இல் இணைந்திருந்தார்கள். அவர்களில் பலர் மறைந்தும் விட்டார்கள்.

நேரடியாக ஈ.பி.ஆர்.எல்.எப் சமூகத்தில் பணியாற்ற முடிந்த அப் பொற்காலத்தில் அவர் மக்களை அணிதிரட்டுவதில் மாபெரும் வீச்சைக் காட்டினார்.

தமிழ் சமூகத்தினுள் உருவாகி வந்த உன்னதமான தலைவர்கள் இந்த சமூகத்தினுள் நன்கு பரிச்சயப்படுவதற்கு முன்னரே படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் சமூக சூழலில் உருவாகிய ஒரு சிறந்த தலைமைப் பண்பு வாய்ந்த தோழர் அவர்.

அவருக்கு தனிப்பட்ட முறையில் ஏராளம் சோகங்கள் இருந்தன. அவற்றை எப்போதும் வெளிக்காட்டியதில்லை.

1990களின் முற்பகுதியில் அவரது தந்தையார் தம்பிராஜா அவர்களை வீட்டிலிருந்து பலவந்தமாக தமிழ் பாசிஸ்டுக்கள் பிடித்துச் சென்றார்கள். அவருக்கு என்ன நேர்ந்தது என்பது இன்றுவரை தெரியாது. பாசிஸ்டுக்களின் வதைமுகாம் ஒன்றில் அவர் கொல்லப்பட்டிருப்பார். அவருடைய தாயார் ரத்தினம்மா ஒரு தைரியமும் துணிவும்மிக்க மனுஷி. தோழர் றொபேட்டின் தந்தையாரை பிடித்துச் சென்றபோது அவர் கொலைஞர்களுடன் அந்த முதிய வயதிலும் பெரும் போராட்டம் நடத்தினார். புலிகளை வெளிப்படையாக விமர்சிப்பதில் அவருக்கு எந்த அச்சமும் இருந்ததில்லை. றொபேட் தோழரின் தந்தையாரை கடத்தி உடைமைகளை அபகரிக்க முயன்ற போது ஊரவர்களை அழைத்து "இதை நீ வைத்துக்கொள். இவங்களுக்கு ஒன்றும் போகக்கூடாது"என்று சொன்னவர்.

நுணாவில் கிராமத்தில் றொபேட் தோழரின் தாயாரின் குரல் ஓங்கி ஒலித்தது. இது தமிழ் பாசிஸ்டுக்களுக்கு நெருடலாக இருந்தது. றொபேட் தோழரின் தாயாரை கடத்தி அவரை கோப்பாயில் சிறை வைத்து, அவரைப் போன்று பலரை வள்ளமொன்றில் ஏற்றி புலிகள் இந்தியாவிற்கு பலவந்தமாக அனுப்பினார்கள்.

றொபேட் தோழர் 1980 களின் நடுப்பகுதியில் அரச படைகளினால் கைது செய்யப்பட்டு சித்திரவதை செயயப்பட்டு பின்னர் ஒரு வருடத்தின் பின் வெலிகடை சிறைக்கு வந்தபோது அங்கிருந்த பல்வேறு இயக்கங்களைச் சார்ந்த அங்கத்தவர்கள் மற்றும் தனிப்பட்ட மனிதர்களுடன் மிகுந்த நட்புறவுடன் பழகினார். ஒரு ஈர்ப்பு அவரிடம் இருந்தது. சிறைச்சாலையில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளின் உரிமைகள் தொடர்பான போராட்டங்களில் அவர் ஈடுபட்டார். 15, 20 நாட்கள் வரையிலான உண்ணாவிரதங்களிலும் தன்னை அர்ப்பணித்திருந்தார்.

றொபேட் தோழர் சிறையில் இருக்கும் போது அவருடைய பெற்றோர் அவரை பார்வையிட வருவார்கள். அவர் தனது பெற்றோருக்கு ஒரேயொரு ஆண் பிள்ளை. றொபேட் தோழருக்கு விசிட் வருகிறதென்றால் வெலிக்கடை சிறையில் உள்ள அரசியல் கைதிகள் கப்பல் வந்திருக்கிறதடா என்று மகிழ்ச்சியுடனும் நகைச்சுவையுடனும் கூறுவார்கள். றொபட் தோழரின் பெற்றோர்,அநேகம் பேர் தடுத்து வைக்கப்பட்டிருந்ததனால், பெரிய உணவுப் பொட்டலங்களை கொண்டுவருவார்கள். றொபேட் தோழர் ஓரிருவார்த்தை. களில் புரையேறுமளவிற்கு மற்றவர்களை சிரிக்க வைத்து விடுவார். நகைச்சுவை உணர்வு கொண்ட மனிதர்.

இன்று உலகம் பூராவும் வாழும் அவருடன் சிறையில் வாழ்ந்த சகாக்களும் அவருடைய சிறுவயது நண்பர்களும் அவருடைய கட்சித் தோழர்கள், ஊரவர்கள் அவரின் சேவையை உணர்ந்த மக்கள் அவர் மீது பெருமதிப்பு வைத்திருக்கிறார்கள்.

ஒரு மனிதன் இந்த உலகில் பிறந்தவன், எப்படி வாழ வேண்டும் என்று வாழ்ந்து காட்டியவர். பாரதியை அவர் மிகவும் வியப்பார். இவ்வளவு கவிதைகளை எழுதி வைத்துவிட்டு சின்ன வயதிலேயே பாரதி மரணித்துப் போனதை அவர் அடிக்கடி குறிப்பிடுவார். யாழ்ப்பாணத்தில் புழக்கத்திலுள்ள பல வாய்மொழி மற்றும் பழமொழிகள் அவருக்கு அத்துப்படியாக இருந்தன. அவர் அந்த விஷயத்தில் ஒரு கலைகளஞ்சியமாகவே திகழ்ந்தார்.

அவர் சமூக அரசியல் வாழ்வில் நேரடியாக பிரவேசிக்க முன்னரே ஜெயகாந்தனின் எழுத்துக்களையும், ரகுநாதன், பொன்னீலன், ஜானகிராமன் போன்றவர்களின் எழுத்துக்களையும் பெருமளவு வாசித்து விட்டார்.

1917ம் ஆண்டு ரஷ்ய புரட்சி பற்றி அங்கு சென்று நேரடியாக அவதானித்து எழுதிய ஜோன் ரீட் இன் உலகை குலுக்கிய பத்து நாட்கள் என்ற புத்தகத்தை ஏற்கனவே அவர் வாசித்திருந்தார். அப்போது நியூ செஞ்சரி புக்கவுசின் மொழி பெயர்ப்பாக அது வெளிவந்திருந்தது. பின்னர் தாய், வீரம் விளைந்தது, இயக்கவியல் பொருள் முதல்வாதம், வரலாற்று பொருள்முதல்வாதம், மார்க்சின் அரசியல் பொருள் முதல்வாதம் என அவர் வாசிப்பை மேற்கொண்டார். மல்லிகை மற்றும் சிறு சஞ்சிகைகள் ஈழத்துச் சிறுகதைகள் எனவும் அவர் வாசித்தார். சினிமா, கவிதை, சிறுகதை, நாவல்கள், பற்றி அவரின் விமர்சனங்கள் மிகவும் கூரிய துல்லிய பார்வை கொண்டவை. வியக்க வைப்பவை. இவற்றை ஒரு நாளும் அவர் எழுதியதில்லை. அவர் எழுதியிருந்தால் அவர் மாபெரும் இலக்கிய படைப்பாளியாகவும் இருந்திருக்கக்கூடும். ஆனால் வாழ்க்கை அனுபவத்தில், போராட்டத்தில் அவர் நேரடியாக ஈடுபட்டிருந்ததனால், கெடுபிடியான சூழலில் ஓய்வொழிச்சலின்றி செயற்பட்டதனால் எழுத வேண்டும் என்ற அவரின் பேரார்வத்தை பூர்த்தி செய்ய முடியவில்லை. நள்ளிரவுகளிலும் தான் நீட்டி நிமிர்ந்து படுப்பதில்லை. அரை தூக்கத்தில் கதிரையில் இருந்து கொண்டிருப்பார் நள்ளிரவு உலக வானொலிகளில் ஆங்கிலத்திலோ, தமிழிலோ செய்திகள் போய் கொண்டிருக்கும்.

இராணுவமயப்பட்ட கட்டுப்பாடுகளை அவர் ஏற்றுக் கொண்டதில்லை. ஆனால் காரியங்கள் நேர்த்தியாக நடைபெறவேண்டும் என்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். போராட்டங்களாயினும் சரி, தேர்தல் பிரச்சாரங்களாயினும்சரி அவருடைய கை வண்ணத்தின் நேர்த்தியை அவதானிக்கலாம். இந்தியாவிற்கு சென்றால் அங்கு நாங்கள் தஞ்சமடைந்தபோது அரசியல் ரீதியிலும் மனிதாபிமான ரீதியிலும் எங்களுக்கு உதவி செய்த நண்பர்களை, தோழர்களை ஆதரவாளர்களை அவர் சந்திக்க தவறுவதில்லை.


ஓய்வொழிச்சலின்றி உழைத்த றொபேட் தோழர் தனது 45வது வயதில் தமிழ் பாசிப் புலிகளினால் நயவஞ்சகமாக காவுகொள்ளப்பட்டார். றொபட் தோழர் என்பது எமது சமூகத்தின் மனச்சாட்சி.

இன்று சூரியதேவன் துதிபாடும் குப்பை பிரச்சார எழுத்துக்கள் சொற்கள் எல்லாம் மனிதகுல முன்னேற்றம் என்ற காலச்சுழியில் அள்ளுண்டு போகும். எமது றொபேட் தோழர் வரலாற்றின் தோள்களில் சுமந்து வரப்படுவார். பொலிவிய காடுகளில் பாசிஸ்டுக்களால் புதைக்கப்பட்ட சேகுவேராவை கியூபாவின் மக்கள் சுமந்து வந்தது போல.

அதுவரை தோழரே!
ஓய்வொழிச்சலின்றி உழைத்த
தோழரே அமைதியாக உறங்குங்கள்.

**ஈ.பி.ஆர்.எல்.எல்- பத்மநாபா**

# கண்ணீர் அஞ்சலி



திருகோணமலை மாவட்டத்தில் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் உறுப்பினராக தன்னை அர்ப்பணித்த தோழர் வரதன் 04-07-2005 புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின் தனது சிவில் வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தவர். அவரது குடும்பத்துக்கும் இந்த சமூக விடுதலைப் போராட்டத்துக்கும் பாரம்பரியம் உள்ளது.

1990களின் முற்பகுதியில் இவரது சகோதரி கடத்தப்பட்டு காணாமல் போனார். அதேபோல் இவரது மைத்துனர் தமிழ் பாசிஸ்டுக்களால் படுகொலை செய்யப்பட்டார். அந்த வகையில் எமது சமூகத்துக்காக பங்களித்த இந்த குடும்பத்திற்கு அன்னாரது இழப்பு ஈடு செய்ய முடியாதது. இவரை படுகொலை செய்யவர்கள் எதனை சாதிக்க முயல்கிறார்கள். இது மனித நாகரிகத்துக்கும், ஜனநாயகத்துக்கும் எதிரான காட்டுமிராண்டிதனமான செயலாகும்.

அன்னாரது குடும்பத்துக்கும் உறவினர்களுக்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா தனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணி-பத்மநாபா(EPRLF-P)
திருகோணமலை மாவட்டம்

# 16 வது நினைவு தினம்



தமிழர் விடுதலைக் கூட்டணியின் (TULF) முன்னாள் கொழும்புக் கிளை செயலாளரும்

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் (LTTE) முதலாவது தலைவரும்

தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) நிறுவனர்களில் ஒருவரும்

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (PLOTE) நிறுவனரும், செயலதிபருமான

**தோழர் முகுந்தன்**
**கதிர்காமர் உமாமகேஸ்வரன்**

விடுதலைக்கு எதிரான சக்திகளால் கபடத்தனமான முறையில் 16.07.1989 இல் படுகொலை செய்யப்பட்ட புளொட் இயக்கத்தின் தலைவர் உமாமகேஸ்வரனின் நினைவு தினம் வீரமக்கள் தினமாக அந்த அமைப்பை சார்ந்தவர்களால் வருடந்தோறும் அனுட்டிக்கப்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் விடிவிற்காக அவர் வழங்கிய பங்களிப்பை நெஞ்சில் நிறுத்தி நினைவு கூரும் வீரமக்கள் தினத்தில் அந்த அமைப்பை சார்ந்தவர்களுடன் நாமும் இணைந்துகொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய – இலங்கை ஒப்பந்தம் 18வது ஆண்டு

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி ஜுலையுடன் 18 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இலங்கையின் தமிழர்களின் நன்மை கருதி அரசியல் யாப்பில் தீவிர மாற்றங்களை கொண்டு வரும் அமைப்பாக இது அமைந்திருந்தது.

இந்தியாவை ஒத்த அதிகார பகிர்வுமுறை இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஒப்பந்தம் உருவாவதில் இந்தியாவின் பங்கு மகத்தானது.

இலங்கையில் அதிகாரப்பகிர்வு இனங்களின் சுயமரியாதை, கௌரவம், ஐக்கியம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு 13வது திருத்தச் சட்ட மூலத்தினூடாக மாகாண சபை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

பிரதானமாக 60 ஆண்டுகளாக நிலவிவந்த இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியின் ஒரு மைல்கல்லாகவே இந்த ஒப்பந்தம் உருவானது.

இலங்கையில் வன்முறையை முடிவுக்குள் கொண்டுவருவதும், இலங்கையின் சமூக வாழ்வை ஜனநாயகமயப்படுத்துவதையும், சமூக பொருளாதார அபிவிருத்தியையும் இந்த ஒப்பந்தம் இலக்காக கொண்டிருந்தது.

வடக்கு கிழக்கில் ஈ.பி.ஆர்.எல்.எப ஈ.என்.டி.எல்.எப், முஸ்லீம் காங்கிரஸ், ஐ.தே.க ஆகிய கட்சிகள் தேர்தலில் போட்டியிட்டு மாகாணசபையில் இணைந்து கொண்டன. ஈ.பி.ஆர்.எல்.எப், ஈ.என்.டி.எல்.எப் ஆளும் கட்சிகளாகவும், முஸ்லீம் காங்கிரஸ், ஐ.தே.க எதிர்கட்சிகளாகவும் விளங்கின.

மாகாணசபை அரச உருவாக்கத்தின் சிறப்பம்சம் வடக்கு கிழக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டது. திருமலை மாகாண அரசின் தலைநகரமாக்கப்பட்டது.

யுத்தத்தினால் சேதமடைந்த பகுதிகள் உள்ளக கட்டமைப்பு அமைச்சினூடாக மறுநிர்மாணம் செய்யப்பட்டன.

ஆனால் இலங்கையில் இனப்பிரச்சினைக்கு சுமூகமான முறையில் தீர்வுகான முற்பட்ட இந்தியாவின் முயற்சிகளை சீர்குலைக்கும் விதமாக புலிகள் பிரேமதாசா அரசுடன் இணைந் செயற்பட்டார்கள்.

இலங்கையில் அமைதியை ஏற்படுத்தும் நன் நோக்கில் வந்த இந்திய அமைதி காக்கும் படையுடன் யுத்தம் புரிந்தார்கள்.

இந்தியாவின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஜனநாயக வழியில் செயல்பட முன்வந்த இயக்கங்களின் தலைவர்கள், அங்கத்தவர்களை, மாகாணசபை உறுப்பினர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் ஆகியோர் நயவஞ்சகமாக படுகொலை செய்யப்பட்டார்கள்.

பிரேமதாசா அரசிடம் ஆயுதமும் பணமும பெற்றார்கள்.

அரசின் விருந்தினர்களாக கொழும்பில் இருந்து கொணடே தமிழர்களின் மனங்களில் வீற்றிருந்த தலைவர் அமிர்தலிங்கத்தை படுகொலை புரிந்தார்கள்.

தமிழர்களுக்கு கிடைத்த, கிடைக்கவிருந்த அத்தனை பலாபலன்களையும் அதற்கான அடித்தளத்தையும் சீர்குலைத்து பெருந்தீங்கிழைத்தார்கள்

மாகாண அரசை கலைத்து இந்திய அமைதிப்படையை இலங்கையில் இருந்து வெளியேற்றுவதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தும்விதமாக பிரேமதாசா அரசுடன் இணைந்து சதிபுரிந்தார்கள்.

இந்த விபரீதத்தின் பலாபலன்களை இன்று இலங்கையில் சகல சமூகங்களுமே அனுபவித்துக் கொண்டிருக்கின்றன.

இற்றைக்கு 17 ஆண்டுகளுக்கு முன்னர் கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பம் முற்றாக கையாளப்பட்டிருந்தால் இன்று இலங்கை சுபீட்சப்பாதையில் கணிசமான தூரம் முன்னேறியிருக்கும்.

ஆனால் கடந்த 17ஆண்டுகளுக்கு மேலாக நிகழ்ந்த அனர்த்தங்களை இங்கு பதிவு செய்வதற்கு இச்சிறு பத்தி போதியதல்ல.

1990 இல் முஸ்லீம்கள் வடக்கு கிழக்கை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். பத்மநாபா உள்ளிட்ட தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கிழக்கில் பல கிராமங்களில் இருந்து தமிழர்கள் புலம் பெயர்ந்தார்கள் அகதி வாழ்வும், மரணமும் அன்றாட நிகழ்வுகளாகின.

மாகாண அரசு சீர்குலைக்கப்பட்ட பின் இவையெல்லாம் நிகழ்ந்தேறின.



வடக்கு கிழக்கு மாகாண அரசை நிராகரித்தவர்கள் இன்று சுனாமி கட்டமைப்பு கேட்கிறார்கள். ஆயுதங்களை கரையோரங்கள் ஊடாக கொண்டு சேர்ப்பதற்கு, சிறுவர், சிறுமியரை யுத்தத்திற்கு அணி திரட்டுவதற்கு சர்வதேச பணம் தேவைப்படுகிறது.

தமிழ் மக்களின் அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்டு தமிழ் மக்களின் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டு பல ஆண்டுகள் கடந்தும் புலிகளின் படுகொலைகள் ஓயவில்லை.

அவர்களுக்கு தேவையானதெல்லாம் மக்களை அடிமைகளாக வைத்திருப்பதற்கும் கொலை இராச்சியம் ஒன்றை நிறுவுவதற்கும் பணமும், ஆயுதமும், உயிருள்ள சிறுவர் சிறுமியரும் மாத்திரமே.

வடக்கு கிழக்கின் கீர்த்திமிக்க மனிதர்கள் பல கொல்லப்பட்டு விட்டார்கள். அல்லது புலம் பெயர்ந்து விட்டார்கள்.

தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடிய மக்கள் இன்று எதிர்ப்பார்ப்பதெல்லாம் வடக்கு கிழக்கில் மூச்சு விடுவதற்கான ஒரு இடை வெளியையே.

# இராஜதந்திர வெற்றி என்பது கூட மக்கள் நலனில் இருந்துதான் நோக்கவேண்டும்

சுனாமியால் பாதிக்கப்பட்டு உறவுகளை இழந்து வேலைவாய்ப்புக்களை இழந்து முகாம்களில் முடங்கியிருக்கும் மக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கும், இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் உள்ள மனிதாபிமான எண்ணங்கொண்ட அனைவருமே குரல்கொடுத்தார்கள், தம்மாலான உதவிகளையும் மனமுவந்தளிக்க முன்வந்தார்கள்.

இதனால், ஆழிப்பேரலையைத் தொடர்ந்து பெருமளவில் கிடைத்த உதவிகள் பாரபட்சமின்றி சகல இன மக்களுக்கும் பகிரப்படவேண்டும், பாதிக்கப்பட்ட ம்க்களை சென்றடைய வேண்டும் என்ற நியாயமான அங்கலாய்ப்பும் எல்லோரிடமும் இருந்தது.

வடக்கு கிழக்கு பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு, மீள்கட்டுமாணப்பணிகளை மேற்கொள்வதற்கு பொதுக்கட்டமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்துவந்த புலிகளும், புலிசார்பு ஊடகங்களும் பொதுக்கட்டமைப்பு க்கையொப்பமிடப்பட்டதும் இப்போது தொனியை மாற்றிக் கொண்டிருக்கின்றன. பொதுக்கட்டமைப்பு பாதிக்கப்பட்ட மக்களுக்கு நன்மை பயக்கும் என்ற நம்பிக்கை இல்லை.

ஆனால் இது புலிகளின் இராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றி, அவர்களுக்கு கிடைத்திருக்கும் அங்கீகாரம் என்ற கூச்சல் கிளம்பியுள்ளது. "எமது மக்கள்" "மனிதாபிமானப் பணி" என்ற கரிசனை இப்போது காணாமல் போய் விட்டது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கவேண்டும், அவர்கள் மீண்டும் பழைய வாழ்க்கைக்குத் திரும்ப வேண்டும் என்ற மனிதாபிமான கோரிக்கைக்கு மக்கள் மத்தியில், ஊடகங்கள் மத்தியில், அரசியல் வாதிகள் மத்தியில் உதவி வழங்கும் நாடுகள் மத்தியில் இருந்த ஏகோபித்த ஆதரவு பலத்த எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், பொதுக் கட்டமைப்பின் உருவாக்கத்திற்கு காரணமாய் அமைந்தது.

பாதிக்கபட்ட மக்களுக்கு நிவாரண உதவிகள் சரிவரக் கிடைக்கவில்லை, அவர்களுக்கு ஏறபட்ட இழப்புக்களை ஈடுசெய்து மீண்டும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப வழிவகை செய்யப்படவில்லை என்ற கோசங்களை முன்வைத்து முகாம்களில் அடைபட்டுக் கிடந்த மக்களை போராட்டங்களை நடாத்தச் செய்து, பொதுக்கட்டமைப்பை புலிகளிடம் வழங்கு என்று கோசம் போட வைத்தவர்கள் பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்தானவுடன் அந்த மக்களின் துன்ப துயரங்களை மறந்து அவர்களுக்கு செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகளை மறந்து கடந்த காலத்தில் பேசிய பேச்சுக்களை மறந்து அரசாங்கத்துடன் இணைந்து பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை காயுமுன்னரே இது புலிகளின் இராஜ தந்திரத்திற்குக் கிடைத்த வெற்றி, புலிகளுக்குக் கிடைத்த அங்கீகாரம் என்று கூப்பாடு போட ஆரம்பித்துவிட்டார்கள்.

இப்போது ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனை விடவும்., அந்த மக்களின் துன்ப துயரங்களை போக்குவதற்கான மனிதாபிமான நடவடிக்கைகளை விடவும் இராஜதந்திர வெற்றி பற்றிய பெருமிதமும் அங்கீகாரம் கிடைத்துவிட்ட ஆரவாரமுமே மித மிஞ்சிக் காணப்படுகிறது.

பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பவர்கள் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே அரசாங்கம் புலிகளுடன் இணைந்து பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதை எதிர்த்தார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் மீதான அக்கறையில் இருந்து பொதுக்கட்டமைப்பு [illegible] படவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தார்கள். அதனை உறுதிப்படுத்துவது போலவே இராஜதந்திர வெற்றி குறித்து கொண்டாடும் போக்கு எடுத்துக் காட்டுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கூட்டணிக்கட்சிகள், பௌத்த மதகுருமார்களின் எதிர்ப்பையும் மீறி தனது அரசியல் இருப்புக்கே ஆபத்து ஏற்படக்கூடும் என்பதையும் பொருட்படுத்தாமல் இந்த ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் உறுதியாகச் செயற்பட்டார். குறிப்பாக பௌத்த மத குருமார்களின் எதிர்ப்புக்கள் காரணமாக கிழித்தெறியப்பட்ட ஒப்பந்தங்களையே அறிந்த இந்த நாட்டில், பௌத்த மதகுருமார்களின் எதிர்ப்பையும் மீறி இதுவரை காலமும் எந்த ஒரு சிங்களத் தலைவரும் செய்யத் துணியாத காரியத்தை ஜனாதிபதி செய்து தனது வாக்குறுதியை நிறைவேற்றியிருக்கிறார். ஆனால் இந்த அரசியல் உறுதிப்பாடு, தமிழர்களின் நலனிலிருந்து கைதூக்கி விடப்படுவதற்குப் பதிலாக, நம்பிக்கைகளை துளிர்க்கச் செய்வதற்குப் பதிலாக கொச்சைப்படுத்தப்படுகிறது.

தமிழர்கள் ஏமாந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வு அவசியமானதுதான் ஆனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நியாயமான தீர்வு காண வேண்டும் என்ற அக்கறையோடு சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னெடுக்கப்படுகின்ற முயற்சிகளை பாகுபடுத்திப் பார்க்கும் பக்குவமில்லையேல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வாய்க்கும் சந்தர்ப்பங்களை பாழ்படுத்துவதாகவே முடியும்.

இராஜதந்திர வெற்றி என்பது கூட மக்களின் நலனிலிருந்துதான் நோக்கப்பட வேண்டும். பரந்துபட்ட மக்கள் ஈட்டிய பலாபலன்களைப் பொறுத்தே இராஜதந்திரத்தின் வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்பட முடியுமே தவிர பாதிக்கப்பட்ட மக்களுக்கு பலனளிக்காது [illegible]

## நினைவு நாள் நினைவுகள்

### அமரர் அ.அமிர்தலிங்கம் அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு



பெயர்:-
அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்

தந்தை:-
சின்னட்டியார் அப்பாப்பிள்ளை
புகையிரத நிலைய அதிபர்
மலேசியா 1925 - 1940 வரை
சங்கானை கிராம சபை
உறுப்பினர்

தாய்:-
வள்ளியம்மை அப்பாபிள்ளை

ஆரம்பக் கல்வி:-
பண்ணாகம் மெய்கண்டான்
வித்தியாலயம் (1931 - 1936)

இடைநிலைக்கல்வி:- சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி, (1936 -1946) முதன்முதலில் இக்கல்லூரியிலிருந்து பல்கலைக்கழகம் சென்று இக்கல்லூரிக்கும் பெருமை சேர்த்தவர்.

உயர்கல்வி:- பேராதனை பல்கலைக்கழகம் (1946-1948)

சட்டக்கல்வி:- சட்டக்கல்லூரி (1948 - 1951) நியாயவாதியாக திறமைச்சித்தி 1950 சட்டக்கல்லூரித் தமிழ் சங்கத்தை ஸ்தாபித்தவர், அதன் முதற் தலைவர்.

சுவாமி விபுலானந்த அடிகள், கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி கொல்வின் ஆர்.டி.சில்வா ஆகியோரிடம் முறையே தமிழ், பொருளாதாரம், சட்டம் பயின்ற பெருமைக்குரியவர்.

சுதந்திரன் பத்திரிகைக்கு 1948 இல் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றி ஒரு கட்டுரை எழுதினார். இதைத் தொடர்ந்து தந்தை செல்வா கடிதம் எழுதி அவரை அழைத்தார்.

மருதானை அரசாங்க இலிகிதர் சேவை சங்க கட்டிடத்தில் 18.12.1949 அன்று தமிழரசுக் கட்சி ஸ்தாபிதம் செய்யப்பட்ட போது அமிர் அவர்கள் மத்திய செயற்குழு உறுப்பினராகத் தெரிவானார்.

அன்றிலிருந்து இறக்கும் வரை அரசியலில் பிரகாசித்தவர். இலங்கை பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவராக மிளிர்ந்தவர். கொழும்பில் 410/27 பௌத்தாலோக மாவத்தையில் அமைந்திருந்த அவரது வாசஸ்தலத்திற்கு 13.07.1989 அன்று சந்தித்துப் பேச என வந்த புலிளை வரவேற்று உபசரித்து உரையாடிக்கொண்டிருந்தவரை சுட்டுக்கொன்றனர் புலிகள்.

### வரலாற்றுக் குறிப்பு


இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஆதரித்த அமிர்தலிங்கம் அவர்கள் 1989 இல் நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ, ஈ.என்.டி.எல்.எவ் ஆகிய கட்சிகளுடன் இணைந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டார். ரெலோ சார்பில் போட்டியிட்ட கருணாகரன், ஈ.பி.ஆர்.எல்.எவ் சார்பில் போட்டியிட்ட சாம் தம்பிமுத்து, பிரின்ஸ் காசிநாதர் ஆகியோர் பாராளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் அனைவரும் போட்டியிட்ட போதும் அமிர்தலிங்கம் அவர்கள் இந்தத் தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக முடியவில்லை ஆயினும் அவர் 17ஆயிரத்து 926 விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார். அவருக்கிருந்த ஆற்றலும் அனுபவமும் இதர கட்சிதலைவர்கள் அவர் மீது கொண்டிருந்த மரியாதையின் நிமித்தமும் அவரை தேசியப் பட்டியல் எம்.பியாக நியமித்துக் கௌரவப்படுத்தினர். அன்று அந்தத் தேர்தலில் அவருக்கு அடுத்தபடியாக விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர் ஒருவருக்கு அமிதலிங்கம் அவர்களின் தேசியப்பட்டியல் எம்.பி பதவி கிடைத்தது. அமிதலிங்கத்தின் பிணத்தின் மீதேறி பாராளுமன்றத்துள் காலடி வைத்தவர் .இன்று அவரையும் மறந்து கடந்து வந்த பாதையையும் மறந்து பாராளுமன்ற உறுப்பினர் பதவியை மட்டும் பற்றிப் பிடித்துக் கொண்டுள்ளார். இத்தகையவர்கள் தமிழ் மக்களின் அரசியல் தலைவர்களாக வலம் வர முடிகிறதென்றால் தமிழ் மக்களுக்கு விடிவு காலம் இப்போதைக்கு இல்லை என்றுதானே பொருள் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜூலை 1983



ந. தங்கவேல் (தங்கத்துரை)



தெய்வநாயகம் பாஸ்கரன் (E.P.R.L.F)



பொன்னம்பலம் தேவகுமார் (E.P.R.L.F)

## 1983 ஜூலை 25 வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டவர்கள்

01. நடராசா தங்கவேல்(தங்கத்துரை)
02. செல்வராஜா யோகச்சந்திரன்(குட்டிமணி)
03. கணேசானந்தன் ஜெகநாதன் (ஜெகன்)
04. செல்லத்துரை சிவசுப்பிரமணியம்(தேவன்)
05. நவரத்தினம் சிவபாதம் (சிவபாதம் மாஸ்டர்)
06. வைத்தியலிங்கம் நடேசுதாசன்(செனட்டர்)
07. செல்லத்துரை ஜெயரட்ணம் (சின்னராஜா)
08. சிவநாயகம் அன்பழகன் (அன்ரன்)
09. அரியபுத்திரன் பாலசுப்பிரமணியம் (ராசன்)
10. காசிப்பிள்ளை சுரேஷ்குமார் (சுரேஷ் மாஸ்டர்)
11. சின்னத்துரை அருந்தவராசா
12. தனபாலசிங்கம் தேவகுமார் (அரபாத்)
13. மயில்வாகனம் சின்னையா
14. சித்திரவேல் சிவானந்தராஜா
15. கணபதிப்பிள்ளை மயில்வாகனம்
16. தம்பு கந்தையா
17. சின்னப்பு உதயசீலன்
18. கதிரவேற்பிள்ளை ஈஸ்வரநாதன் (கணேஷ்வரன்)
19. கிருஷ்ணபிள்ளை நாகராஜா
20. கணபதி கணேசலிங்கம் (கணேஷ்)
21. அம்பலம் சுதாகரன்
22. இராமலிங்கம் பாலச்சந்திரன்
23. பசுபதி மகேந்திரன்
24. காசிநாதன் தில்லைநாதன் (கண்ணன்)
25. செல்லப்பா குலராஜசேகரம் (குலம்)
26. குமாரசாமி உதயகுமார் (மோகன்)
27. சுப்பிரமணியம் சிவக்குமார் (ராஜன்)
28. ராஜன் கோதண்டபிள்ளை தவராஜலிங்கம்
29. கருப்பையா கிருஷ்ணகுமார் (கொழும்பான்)
30. ராஜயோகநாதன் (யோகன்)
31. ஞானசேகரன் அமிர்தலிங்கம் (அமுதன்)
32. அந்தோணிப்பிள்ளை உதயகுமார்
33. அழகராசா ராஜன்
34. வேலுப்பிள்ளை சந்திரகுமார்
35. சிற்றம்பலம் சாந்தக்குமார் (சாந்தன்)

## 1983 ஜூலை 27ம் திகதி படுகொலை செய்யப்பட்டவாகள்

01. தெய்வநாயகம் பாஸ்கரன்
02. பொன்னம்பலம் தேவகுமார்
03. பொன்னையா துரைராசா
04. முத்துகுமார் ஸ்ரீகுமார்
05. அமிர்தநாயகம் பிலிப் குமாரகுலசிங்கம்
06. செல்லச்சாமி குமார்
07. கந்தசாமி சர்வேஸ்வரன்
08. அரியாம்பிள்ளை மரியாம்பிள்ளை
09. சிவபாதம் நீதிராஜா
10. ஞானமுத்து நவரட்ணசிங்கம்
11. கந்தையா ராஜேந்திரம்
12. டாக்டர் ராஜசுந்தரம்
13. சோமசுந்தரம் மனோரஞ்சன்
14. ஆறுமுகம் சேயோன்
15. தாமோதரம்பிள்ளை ஜெயமுகுந்தன்
16. சின்னத்தம்பி சிவசுப்பிரமணியம்
17. செல்லப்பா இராஜரட்ணம்
18. குமாரசாமி கணேசலிங்கம்

20 ஆண்டுகளின் பின்னர் அந்த பயங்கரமான அந்த கணங்கள் கறுப்பு ஜூலை 21,22,23,24,25,26,27 களை நாம் நினைவு கூருகிறோம்.

அன்றைய தினம் இலங்கையின் நாகரீகமான மக்கள் வெட்கித் தலை குனிந்து நின்றார்கள். இன்றளவும் நாகரீகமான மக்கள் மத்தியில் அந்த வெட்கம் அவமான உணர்ச்சி தலை தூக்கி நிற்கிறது.

கொழும்பிலும், தெறகிலும், மலையகத்திலும் 2000 தமிழர்கள் கொல்லப்பட்டு லட்சக்கணக்கான தமிழர்கள் அகதிகளானார்கள். அவர்கள் இந்தியா அனுப்பி வைத்த கப்பல்களில் வடக்கு நோக்கி நகர்ந்தார்கள். தெற்கில் பேரபாயத்தின் மத்தியிலும் தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்கிய சிங்கள மக்களையும் இவ்விடத்தில் மறந்து விடமுடியாது.

இந்த கைங்கரியம் சமூகத்தின் நாகரீகமான மனிதர்கள் செய்தவையல்ல. மக்களை பிரித்து கொலைகார அரசியல் நடாத்த விரும்புவோரே இதனை விதைத்தார்கள். குண்டர்களை ஏவி இனசங்காரம் புரிந்தார்கள்.

அரச யந்திரத்தின் பரிபூரண ஒத்துழைப்புடனேயே அதன் செயற்பாடாக



செல்வராஜா யோகச்சந்திரன் (குட்டிமணி)

வே இந்த அபகீர்த்திமிக்க காரியம் மேற்கொள்ளப்பட்டது.

வெலிக்கடை சிறையில் அடுத்தடுத்து நிகழ்ந்த படுகொலைகள் - அதில் 53 தமிழ் போராட்டக்காரர்கள் படுகொலை செய்யப்பட்டது அதற்கு திட்டவட்டமான சான்று.

இந்த 1983 ஜூலை தமிழர்களின் வாழ்வில் நிர்ணயமான நாட்களாக இருந்தன. இந்த நாட்கள் நாம் ஒன்றாக சகோதரர்களாக வாழ முடியுமா என்ற கேள்வியை எழுப்பிய நாட்கள் அவை.

லட்சக்கணக்கான மக்கள் தமிழகத்தில் தஞ்சம் புகுந்தார்கள். இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் மத்திய கிழக்கு, ஐரோப்பா, வட அமெரிக்கா நாடுகளென சிதறியோடினார்கள்.

ஓடுவதற்கு வழி தெரியாத மக்கள் யுத்தத்தினுள் அகப்பட்டு மரணத்துடனும் இடம்பெயர்வு, அச்சுறுத்தல்களுக்குள்ளும் வாழ்ந்தார்கள்

தமிழர்கள் மத்தியில் உருவான ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் பல்வேறு கொள்கை நிலைப்பாடுகளை கொண்டிருந்தன. இலங்கையின் சமூக வாழ்வு ஜனநாயகமயப்படுத்தப்பட வேண்டும், சிறுபான்மை இனங்களின் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், அதற்கு இந்த நாட்டின் அனைத்து மக்களின் ஆதரவு பங்களிப்பு தேவை என்ற புரிதலுடன் ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற இயக்கங்கள் செயற்பட்டன.

புலிகள் அதிகார வெறிகொண்டு உள்ளிருந்தே கொல்லும் வியாதியை பெரும் எடுப்பில் ஆரம்பித்தார்கள். பேரினவாதம் எத்தகைய கொடூரங்களை தமிழர்களுக்கு விளைவித்ததோ அவற்றையெல்லாம் விஞ்சியவாறு புலிகள் தமது பாசிச அராஜகத்தை கட்டவிழ்த்து விட்டார்கள். அவர்கள் சக தமிழர்களை, முஸ்லீம்களை, வடகிழக்கின் எல்லைப் பிரதேசங்களில் வாழ்ந்த ஏழை சிங்கள மக்களை, அனுராதபுரம் புனித போதிமரத்தின் கீழ் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவர்களை, காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லீம்களை வகை தொகையின்றி கொன்று தள்ளினார்கள்.

இது தமிழர் போராட்டம் சீரழிந்த கதை. அது ஆயுத, போதைவஸ்து கடத்தலாக சர்வதேச கிரிமினல்களாக தமிழர்களை கருதும் அளவிற்கு சீரழிந்த கதை.

அந்தக் கிருமிகள் தம்மை தமிழ் சமூகத்தில் கடவுள்களாக பிரகடனம் செய்து கொண்டவர்களின் பங்கு கொஞ்சநஞ்சமல்ல.

இப்போது இலங்கை இனமுரண்பாட்டுச் சிக்கலில் இருந்து விடுபட்டு நாகரீக வாழ்வை நோக்கி அடியெடுத்துவைத்து அல்லாடிக் கொண்டிருக்கிறது.

1983 ஜூலை வன்முறைகள் நடைபெற்று 20 வருடங்களின் பின் ஜனாதிபதி சந்திரிகா நாட்டின் தலைவி என்ற ரீதியில் தனது மனவருத்தத்தை தெரிவித்திருந்தார்.

1983 ஜூலை கலவரத்தில் நேர்ந்த அனர்த்தங்கள் தொடர்பாக ஆராயப்படுவதற்கு விசாரணை கமிஷன் அமைக்கப்பட்டு இழப்புக்களை சந்தித்தவர்களுக்கு நஷ்டயீடு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் ஜூலை கலவரத்தின் பின் தமிழ் சமூகம் சிதறிவிட்டது. இந்த முக்கியத்துவம் வாய்ந்த விடயத்தை மீள் செய்ய முடியாது போய் விட்டன.

1983 இல் ஜே.ஆர் அரசு கட்டவிழ்த்து விட்ட வன்முறையை இடதுசாரிகள் மீதும், ஜே.வி.பி யினர் மீதும் சுமத்தி நக்சல்பாரி சதிபுரட்சியென்று புரளி கிளப்பி விஜயகுமாரணதுங்கா போன்ற தலைவர்களையும் சிறையில் அடைத்தது.

உண்மையில் ஜே.ஆர். திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தியதால் தொழிலாளி வர்க்கத்திற்கு எதிராகவும் இன நல்லுறவிற்கு எதிராகவும் செயற்பட வேண்டிய தேவை இருந்தது.





டாக்டர் எஸ். ராஜசுந்தரம் (காந்தியம்)

இருண்ட இரத்தம் தோய்ந்த 1983 ஜூலை நாட்கள் திரும்பவும் மீளக்கூடாது என்பதில் இலங்கையின் நாகரீகமான சகல மக்கள் பிரிவினரும் அக்கறையுடன் இருக்கிறார்கள்.

எனினும் தீ வளர்ப்பதற்கு தமிழர் தரப்பிலும் சிங்களவர் தரப்பிலும் ஆட்கள் தயாராக இருக்கிறார்கள்.

திருமலை புத்தர்சிலை விவகாரம் அவ்வாறான ஒன்றே. சாந்த சொரூபியான, ஆசிய ஜோதியான கௌதம புத்தர் அன்பு, கருணை. அகிம்சையையே போதித்தார்.

ஆனால் புத்தர் சிலையை வைத்துக்கொண்டு இனமுரண்பாட்டு நச்சு விதையை சமூகத்தில் விதைக்க பல்வேறு தரப்பிலுமே முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஒரு புதிய இன வன்முறை புலிகளுக்கு ஆட்கள் சேர்ப்பதற்கான ஒரு தளத்தை உருவாக்குமென புலிகள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நியாயபூர்வமான தீர்வு சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி, நிவாரணங்கள் வழங்குவது தொடர்பிலும் பேதங்கள் உருவாகியுள்ளன.

மறுபுறம் புலிகள் மாற்றுக்கட்சியினரின் உரிமைகளையும், முஸ்லீம்களின் உரிமைகளையும் மறுத்து வருகிறார்கள். படுகொலைகள் மூலம் தமது ஏகப்பிரதிநிதித்துவத்தை நடைமுறையில் நிறுவ முயல்கிறார்கள். இதனால் இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பங்கள் பினதள்ளிப் போகின்றன.

பாதுகாப்பில்லாத, நிச்சயமில்லாத எதிர்காலத்தை நோக்கி மக்கள் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை சமூகம் சிங்களம், தமிழ், முஸ்லீம் என்ற நிலையில் இருந்தது. பௌத்தர்கள், இந்து, இஸ்லாமியர், கிறீஸ்தவர் என்று பிளவுபடும் நிலைக்குச் சென்றுள்ளது.

பௌத்த சிங்கள இனவாதமும், தமிழ் புலி பாசிசமும் இலங்கையின் சமூக சிதறல்களிற்கு கணிசமான பங்களிப்பை வழங்கியிருக்கிறார்கள். தமிழ் பாசிசம், பேரினவாதம் இவற்றுடன தொடர்புபட்ட யுத்த அழிவு. இயற்கை பேரனர்த்தம் இவற்றின் பிடியில் இருந்து இலங்கை சமூகம் உயிர்த்தெழ வேண்டிய பீனிக்ஸ் பறவையின் சவாலை எதிர் நோக்கி நிற்கிறது.

1983 ஜூலையை நினைவு கூரும் நாம் நாகரீகமான மனிதாபிமானம் நிறைந்த புதியதொரு உலகிற்கு தயார் செய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15வது தியாகிகள் தினம்




2005 ஜூன் 19 அன்று முற்போக்கு சிந்தனையாளர் கழகத்தினரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபாவும் இணைந்து தியாகிகள் தினத்தின் 15வது ஆண்டு நினைவை அனுசரித்தனர்.

இந் நிகழ்ச்சியில் தோழர்கள் க. சுப்பு, முன்னாள். எம்.எல்.ஏ எழுத்தாளர் த.ஜெயகாந்தன், டாக்டர் ஜெயனுதீன், மு.சம்பத், வடசென்னை சி.பி.ஐ செயலாளர் க. மாணிக்கம், ஆர்.பி.எஸ். ஸ்டாலின், தலித் பாஸ்கர், பல்லவன் தாஸ், ஞானம்(ஈ.பி.ஆர்.எல்.எப்-பத்மநாபா) ஆகியோர் உரையாற்றினர்.

★ தோழர் பத்மநாபா அவர்கள் 15வது நினைவு தினத்தை மனித உரிமைகளை, ஜனநாயகத்தை வலியுறுத்தும் தினமாக நினைவு கூர்வதே பொருத்தமானதாக இருக்கும் என நாங்கள் கருதுகிறோம்.

★ மனித உரிமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கமாகவே இதனை மேற்கொள்கிறோம்.

★ விடுதலைப் புலிகள் இன்று வரை தொடர்ந்து ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா இயக்கத்தினரையும் ஏனைய போராளி இயக்கத்தினரையும் கொன்று குவித்து வருகிறார்கள்.

★ வடக்கு கிழக்கு மாகாணங்களில் ஜனநாயக சூழல் ஒன்று உருவாவதையும் வெவ்வேறு கட்சிகளின் செயற்பாட்டையும் அவர்கள் அங்கீகரிக்கவில்லை. மாறாக தாங்கள் மட்டுமே ஏகப்பிரதிநிதி என்ற ஜனநாயக விரோத கருத்தை முன்வைக்கிறார்கள்.

★ குறிப்பாக இலங்கையில் கிழக்கு பகுதிகளிலேயே அதிக படுகொலைகள் நிகழ்கின்றன. நாளும் பொழுதும் படுகொலைகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

★ புலிகளின் படுகொலைகளும், யுத்தத்திற்கு ஆட்களை திரட்டுவதும் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்பதையே நாங்கள் வலியுறுத்துகிறோம்.

★ தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு ஐக்கிய இலங்கைக்குள் சமாதான தீர்வு காணப்பட வேண்டும் என்பதையும் அதற்கு பல்வேறு கட்சிகளின பங்கு அவசியமானது என்பதையும் புலிகள் தங்களின் ஏகபிரதிநிதித்துவ பாசிச போக்கால நிராகரித்து வருகிறார்கள். மற்றவர்களின் உயிருக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி வருகிறார்கள்.

★ இந்தியாவின் இறையான்மைக்கும் பாதுகாப்பிற்கும் குந்தகம் ஏற்படுவதை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி-பத்மநாபா ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. இந்தியாவின் நட்பையும், ஆதரவையும் என்றென்றும் E.P.R.L.F-P மதிக்கிறது.

இனரீதியான ஒடுக்கு முறைக்கு எதிராகவும், பாரபடசமற்ற சமூக அமைப்பிற்காகவும், தமிழ் சமூகத்தினுள் ஜனநாயகம், மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், பல்லாயிரக்கணக்கான தோழர்கள், போராட்டக்காரர்கள், பொதுமக்களை நினைவு கூர்வதற்காகவே இந்த ஜூன் 19 தியாகிகள் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்த நாட்டில சமூகங்களிடையே பாரபட்சமற்ற சமத்துவமான ஒற்றுமை. நிலவ வேண்டும். பாரபட்சமான பொருளாதார கட்டமைபபில் மாற்றம் வேண்டும். சமூகரீதியான ஒடுக்குமுறைகள் களையப்பட வேண்டும். பெண்களுக்கு சமூகத்தில் சமத்துவமான பங்களிப்பு வேண்டும். மனிதர்கள் மகிழ்ச்சியாகவும், நிம்மதியாகவும் அச்சமின்றி சமாதானமாக வாழ வேண்டும் என்பதற்காகவே இந்த தியாகிகள் தமது உயிரை அர்ப்பணித்திருக்கிறார்கள்.

உலகப்பந்தில் நாமும் மானிடர் என தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்று அவர்கள் கனவு கண்டார்கள். ஆனால் தமிழ் சமூகத்தினுள் ஆயுதக் கலாச்சாரம் பேரழிவுச் சக்தியாக வடிவம் எடுத்தது. உள்ளிருந்தே கொல்லும் வியாதியாக அது தமிழ் மக்களை சீரழித்தது. இந்த தீராத வியாதியினால், மனநோயினால் பல ஆயிரக் கணக்கானோரின் உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. அவர்களின் சுதந்திர, ஜனநாயக வேட்கை நசித்து அழிக்கப் பட்டது. அச்சமின்றி தமது கருத்தை சொல்வது, தமது மனச்சாட்சிக்கேற்ப குரல் கொடுப்பது, எழுதுவது போன்ற எல்லாமே சர்வநாசம் செய்யப்பட்டன.

விடுதலைப்புலிகள் ஏக அதிகாரத்தை கேள்விக்குள்ளாக்கும் எல்லோரையும் கிள்ளுகீரையாக கருதி அழிததொழித்தனர்.

யுத்தத்தினால் அழிவு, ஜனநாயக விரோத சக்திகளின் சகோதர படுகொலைகள் தமிழ் சமூகத்தின் சாரம்சமாக இருந்த மனிதர்களை காவு கொண்டு விட்டது.

இயற்கையும் தன் பங்கிற்கு விட்டு வைக்கவில்லை. 1978இல் கிழக்கில் வீசிய சூறாவளி மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் பல நூற்றுக்கணக்கான உயிர்களை காவு கொண்டதோடு விலைமதிக்க முடியாத இயற்கை செல்வங்களையும் அழித்தது. பின்னர் யுத்தம் பல கிராமங்களை சுடுகாடாக்கியது. இறுதியாக சுனாமி பேரலை இந்த நாட்டின் மூன்று இன மக்கள் சமூகத்தின் கரையோர நாகரீகத்தையே அழித்தது. என்றாலும் வன்முறையாளர்கள மனம் நெகிழவில்லை. அவர்கள் தமது கொலை இயந்திரத்தை முடுக்கி விட்டார்கள்.

சுனாமி அகதி முகாமிலிருந்து குக்கிராமங்கள் வரை அவர்கள் இயக்கங்களில் இருந்து ஒதுங்கி சமூக வாழ்க்கைக்கு சென்றவர்களையும், தங்களுக்கு மாற்று கருத்துடைய கல்விமான்கள், எழுத்தாளர்களை கொன்று தள்ளினார்கள். அவர்களின் துப்பாக்கிகள் இன்றும் நெருப்பை கக்கியபடியே இருக்கின்றன. சுனாமி அகதிகள் முகாமகள் கூட அதற்கு விதிவிலக்கல்ல.

சிறுவர், சிறுமியர், இளைஞர், யுவதிகள் சுனாமி அகதி முகாம்களிலும், பாடசாலைகளிலும், வீதிகளிலும், யுத்தத் தேவைகளுக்காக கடத்திச் செல்லப்படுகிறார்கள்.

தமிழ் மக்களின் அபிலாஷை என்பது ஒரு குழுவின் அபிலாஷை அல்ல ஒரு குழுவின் வன்முறை, அதிகார பேராசை, முழுச்சமூகத்தையுமே சர்வநாசம் செய்துள்ளது. இந்த நாட்டின் இனங்களுக்கிடையே விரிசலை தக்க வைத்திருப்பது என்பது புலிகள் தங்களின் இருப்பிற்கு அத்தியாவசியமான தொன்றாக மாற்றியிருக்கிறார்கள்.

வடக்கு கிழக்கு பிராந்தியத்தில் ஒரு ஜனநாயக இடைவெளி தேவை. இந்த இடைவெளி இல்லாததால் சமூகத்தின் அபிப்பிராயம் என்பது குரல்வளை நெரிக்கப்பட்ட நிலையில் இருக்கிறது. வெவ்வேறு கட்சிகள் செயற்பாடு என்பது சவாலான ஒரு விசயமாக மாறியுள்ளது. நாகரீகமான சமூகத்திற்கு புறம்பான அத்தனை விஷயங்களும் தமிழ் சமூகத்தினுள் அரங்கேற்றப்படுகின்றன.

குறிப்பாக கிழக்கு மாகாணம் அன்றாட கொலைகளால், ஆட்கடத்தலால் சின்னா பின்னமாக்கப்பட்டிருக்கிறது. அங்கு ஒரு அமைதி சூழ்நிலை இல்லையென்றால் சுனாமி நிவாரணப் பணிகளைக்கூட செவ்வனே செய்ய முடியாது. மக்கள் ஒரு பேரழிவை சந்தித்திருக்கும்போது அதற்குள் கொலைப்பாதகம் புரிபவர்கள் எரிகிற வீட்டில் கொள்ளி சொருகுபவர்களாகவே இருப்பார்கள். புலிகள் அந்த காரியத்தை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

உண்மையான ஒரு சமூக இயக்கம் எப்போதும் மக்கள் நேயமுள்ளதாக இருக்கும். பரந்துபட்ட மக்களின் நலனகளுக்காக குரல் கொடுக்கும். போராடும். ஆனால் இங்கு பரந்துபட்ட மக்களின் நலன்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றன. எமது மக்கள் நரகப் படுகுழிக்குள் வீழ்ததப்பட்டிருக்கிறார்கள். இந்த படுகுழியில் இருந்த எம் மக்கள் மீள்வதற்கான முயற்சியல் சமூக அககறையுள்ளோர் தம்மை அர்ப்பணிக்க வேண்டும். ஆனால் அப்படி அக்கறையுள்ளவர்கள் செயற்பட முடியாதவொரு சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

எத்தகைய இழப்புக்களையும், சோதனைகளையும் சந்தித்தபோதும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது தேசத்தின் நலன்களுக்காகவும், மக்களின் வாழ்வுரிமைக்காகவும், ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்காகவும் தொடர்ந்து போராடி வருகிறது. இனியும் அப்பணியில் அயராது உழைக்கும்.

நன்றி – ஜீவா முழக்கம்
சென்னை




தாகசாந்தி நிலையம் - மட்டக்களப்பு

## ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா

### III. கட்சியின் அடிப்படை நிலைப்பாடுகள்.

1. இலங்கை எமது நாடு. அதில் பிரிவினைக்கு இடமில்லை. அளவில் வேறுபட்டாலும் தன்மைகளில் வேறுபட்டாலும் இலங்கை வாழ் அனைத்து சிறுபான்மைத் தேசிய இனங்களும் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதப் போக்குகளினாலும் இன வெறிக்கொள்கைகளினாலும் பல்வேறு வகையிலும் பாதிக்கப் பட்டுள்ளன. இலங்கையில் பல்லாயிரம் உயிர்களைப் பலி வாங்கியும் பல்லாயிரம் கோடி ரூபா பெறுமதி வாய்ந்த தேசிய மற்றும் சமூக சொத்துக்ளை சீரழித்தும் உள்ள உள்நாட்டு யுத்தமாகக் கூர்மையடைந்துள்ளது. மிகவும் சிக்கலுக்குள்ளும் குழப்பங்களுக்குள்ளும் உள்ளாக்கப்பட்டுள்ள இன முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கும் சமாதானமான சகோதரத்துவமான ஓர் இலங்கை சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் விரிவான அதிகாரப் பகிர்வை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாநில சுயாட்சி அமைப்புக்களை நிலைநிறுத்துகின்ற ஓர் அரசியற் தீர்வே அவசியமாகும். அதற்கான இயக்கத்தை விடாப்பிடியாக முன்னெடுப்போம். இலங்கையின் அனைத்து சிறுபான்மைத் தேசிய இனங்கள் மத்தியிலுமுள்ள இயக்கங்களும் சிங்கள மக்கள் மத்தியிலுள்ள ஜனநாயக முற்போக்கு சக்திகளும் இணைந்து மாநிலங்களுக்கு விரிந்த சுயாட்சி அதிகாரம் என்ற சுலோகத்தின் அடிப்படையில் ஓர் சக்தியாக செயற்படல் வேண்டும்.




இரத்ததான நிகழ்வு - யாழ்ப்பாணம்

தி. சிறிதரன் 141ஏ, மன்னார் வீதி, குரு[illegible] C.R.C Press அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org